KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 17 ஜனவரி 2025 இதழ்:- 03

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

## இலங்கையில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமைகளை தமிழக அரசும் தடை செய்ய வேண்டுமென

## தமிழக முதல்வரிடம் அமைச்சர் சந்திரசேகரன் கோரிக்கை!

இழுவைமடிப் படகு சுருக்குவலை உள்ளிட்ட தடை செய்யப்பட்ட மீன் பிடி முறைமைகளை தமிழக அரசாங்கமும் தடைசெய்வதற்கு உடனடியாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கடற்றொழில் (3ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாரம் தோறும் வாசிக்கலாம்

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel (416) 270-1111
Fax (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## இந்தியப் பாராளுமன்றத்தில் தமிழர் பிரச்சனையை கனிமொழி ஊடாக முன் நகர்த்த நடவடிக்கை?



இலங்கைத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தினை பாரதப் பாராளுமன்றத்திற்கு முன்னகர்த்தி அழுத்தங்களை பிரயோ கிப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்றக்குழுத் தலைவர் கனிமொழி ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப் படவுள்ளதென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கனிமொழி தலைமையில் விரைவில் தி.மு.க.வின் பாராளுமன்ற உறுப்பினர்களையும், வெவ்வேறு மாநிலங்களின் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் (5ம் பக்கம் பார்க்க)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தை நிர்வகிப்பது யார்? சிறிதரன் ஆதரவுக்குழுவா? போராளிகள் நலன் காப்பகமா? சிங்களப் பொலிசார் களத்தில் இறங்கி சமாதானப்படுத்தினர்



கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தை நிர்வகிப்பது யார் என்ற சர்ச்சையினால் ஏற்பட்ட அமைதியின்மை சூழ்நிலையை பொலிஸார் தலையிட்டு கட்டுப்படுத்தினர். கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்பதற்காக மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பக தரப்புகள் முனைந்த போது இந்த அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் நினைவேந்தலுக்காக 2016ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டது. இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் (6ம் பக்கம் பார்க்க)

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!


என் இனிய உறவுகளே! தாயகத்தில் மாரி மழையுடன் சேர்ந்து பாரிய அனர்த்தங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளை உணவுப் பொருட்கள் மற்றும் உடை, போர்வை போன்ற அத்தியாவசிய தேவை அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்கும் உடனடித் தேவையாகவுள்ளது. குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*



## PROFESSIONAL AGENT!
## PREMIER RESULTS !!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com
**Bus: 416-289-3333**

22 Years Real Estate Experience


RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers

885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Warden/Finch



**Scarborough** $449,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school

### Eglinton/Markham



**Scarborough** $475,000
2 Beds • 2 Baths • 6 Rooms
Renovated throughout the years

### Westney Rd / Kingston Rd



**Ajax** $489,000
2 Beds • 2 Baths • 6 Rooms
Closer to Highway 401

### Markham / Ellesmere



**Scarborough** $529,990
1+1 Beds • 2 Baths • 4 Rooms
Brand New Penthouse unit

### Mccowan & Hwy 401


**Scarborough** $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views

### Kennedy / 401


**Scarborough** $599,000
2 Beds • 2 Baths • 6 Rooms
Corner unit offers a prime location

### Markham & 14th Avenue



**Markham** $649,000
2+1 Beds • 2 Baths • 5 Rooms
Open-concept living and dining

### Cornell Meadows / 9th Line



**Markham** $668,000
2 Beds • 3 Baths • 7 Rooms
Upgraded floor, Newly renovated

### Markham & Sheppard


**Scarborough** $679,900
3+1 Beds • 1 Baths • 6 Rooms
New Laminate Floors Throughout

### Altona & Finch


**Pickering** $789,900
3 Beds • 4 Baths • 8+2 Rooms
Freehold Townhouses

### Guildwood Village


**Scarborough** $999,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Basement with separate entrance

### Markham & Ellesmere


**Scarborough** $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance

### Morningside/Mcnicol



**Scarborough** $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

### Simcoe / Winchester


**Oshawa** $1,149,000
4 Beds • 4 Baths • 8 Rooms
Easy access to the new 407

### Glen Dhu Dr/Flint Cres


**Whitby** $1,188,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Over $130k on Renovations

### 9th Line/Hoover Park


**Stouffville** $1,339,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Beautifully Landscaped Exterior

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இலங்கையில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமைகளை தமிழக அரசும் தடை செய்ய வேண்டுமென தமிழக முதல்வரிடம் அமைச்சர் சந்திரசேகரன் கோரிக்கை!




இழுவைமடிப் படகு சுருக்குவலை உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமைகளை தமிழக அரசாங்கமும் தடைசெய்வதற்கு உடனடியாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை களை முன்னெடுக்க வேண்டும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கோரிக்கை விடுப்பதாக தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற அயகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்பதற்காகச் சென்றிருந்த அவர் தமிழகத் தொலை க்காட்சியொன்றுக்கு வழங்கிய செவ்வி யின் போதே மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழக முதல்வர், இந்திய வெளிவிவ கார அமைச்சருக்கு கடிதம் மூலம் தமிழக மீனவர்கள் இலங்கையின் கடற் படையால் கைது செய்யப்படுகின்றார் கள் என்று கடிதம் மூலம் அறிவித் துள்ளார். ஆனால் அவர்கள் ஏன் கைது செய்யப்படுகின்றார்கள் என் பதை கூறுவதற்கு அவர் மறுதலித்து விட்டார்.

எந்தவொரு பிரஜையும் வெளிநாட்டு க்குச் செல்கின்ற போது காரணம் இல்லாது கைது செய்யப்படுவதில்லை. உண்மையில் இந்திய மீனவர்கள் இலங்கையின் கடற்பரப்பிற்குள் அத்து மீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபடு வதாலும், சுருக்குவலை, இழுவை மடிப்படகு ஆகிய சட்டவிரோத முறைமைகளை பின்பற்றுவதாலும் தான் கைது செய்யப்படுகின்றார்கள்.

இவ்வாறு அத்துமீறி சட்டவிரோத மீன்பிடி முறைமைகள் மூலமாக நாளைய தலைமுறைக்குச் சொந்த மான வளங்கள் நிறைந்த கடற்பரப்பி னையே நாசமாக்கிக் கொண்டு வரு கின்றார்கள். இந்தச் செயற்பாட்டுக்கு பெருமளவான தமிழக மீனவர்களே எதிர்ப்பு வெளியிடுகின்றார்கள். ஆனால் குறிப்பிட்ட சிலர் தான் அவ்விதமாகச் செயற்படுகின்றார்கள்.

அவ்வாறு குறிப்பிட்ட சிலர் வளங்கள் நிறைந்த கடற்பரப்பினை நாசமாக்குவ தால் பாதிக்கப்படுவது யாரென்று பார்த்தீர்கள் என்றால் வடக்கில் உள்ள தமிழர்கள் தான். அவர்கள் மூன்று தசாப்தமாக போருக்கு முகங்கொடுத்து உயிர்கள், உடைமைகள் என்று அனைத்தையும் இழந்து நின்றவர்கள் தற்போது தான் தங்களுடைய வாழ்க் கையை பொருளாதார ரீதியாக மீளக் கட்டியெழுப்புவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். வடக்கு தமிழ் மீனவர்கள் என்னிடத்தில் நேரடியாகவே பல சந்தர்ப்பங்களில், இழுவை மடிப்படகுகள் உட்பட சட்டவிரோதமான மீன்பிடி உபகர ணங்களை பயன்படுத்தி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுபவர்களை தடுத்து நிறுத்துங்கள் இல்லையென்றால் நாங்கள் கடலில் வீழ்ந்து தான் மரணி க்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். ஆகவே இந்தவிடயம் சம்பந்தமாக நாம் இந்திய உயர்ஸ்தானிகரிடத்தில் எடுத்துரைத்துள்ளோம். தமிழக முதல் வரிடத்திலும் ஒரு விடயத்தினை நாம் கோரிக்கையாக முன்வைக்கின்றோம். அதாவது சட்டவிரேதமான மீன்பிடி முறைமைகளை தடை செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். மேலும் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபவர்கள் தான் கைது செய்யப்படுகின்றாகள் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

தமிழக மீனவர்கள் இந்தியாவின் ஏனைய மாநிலங்களான ஆந்திராவுக் குள்ளோ, குஜராத்துக்குள்ளோ, கேரளா வுக்குள்ளோ செல்லமுடியுமா? இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் கடற்பரப்பிற் குள்ளோ, சீனக் கடற்பரப்பிற்குள்ளோ செல்ல முடியுமா? இல்லை. ஆனால் இலங்கைக் கடற்பரப்பினையே தான் தோன்றித்தனமாக பயன்படுத்தும் செயற்பாடு எதேச்சதிகாரமாக முன்னெ டுக்கப்படுகின்றது. அந்தச் செயற்பாட் டையே நாம் வன்மையாக கண்டிக் கின்றோம்.

சட்டவிரோத மீன்பிடி முறைமை களான சுருக்குவலை மற்றும் இழுவை மடிப்படகு ஆகியவற்றை தடைசெய்யும் தீர்மானத்தினை இந்திய மத்திய அரசாங்கம் எடுத்துள்ள நிலையில் தமிழக அரசாங்கமும் அத் தீர்மானத்தினை எடுப்பதோடு நடை முறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். அதில் காணப் படுகின்ற தாமதங்களால் தான் கைது கள் தொடருகின்றன என்றார்.

# அநுர அரசை விசாரித்த தமிழக முதல்வர் ஸ்டாலின்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வின் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு,கிழக்கு தமிழ் அரசியல் பிரமுகர்களிடத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விசாரி த்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற அயகத் தமிழர் மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வின் போது, இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், அக்கட்சியின் ஊடகப்பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ வின் தலைவருமான செல்வம் அடை க்கலநாதன் ஆகியோருடன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் புகைப்படம் எடுத்துக் கொண்டார். இதனை யடுத்து இலங்கையின் புதிய அரசாங் கம் எப்படிச் செயற்படுகின்றது, புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எவ்வாறு நடவடிக்கைகளை முன் னெடுக்கின்றார் என்று அவர்களி டத்தில் வினவியுள்ளார்.

இதன் போது பதிலளித்த சுமந்திரன், ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இப் போது தான் மூன்று மாதங்களாகி ன்றன.

பல்வேறு வாக்குறுதிகளை அளித்து ள்ளார்கள். ஆகவே அவர்களின் அடுத்த கட்ட நகர்வுகளை அவதானி ப்பதற்கு மேலும் சிலகாலம் அவகாசம் தேவையாக உள்ளது என்றார். அப்பதிலுடன், நாங்களும் ஜனாதிபதி



அநுரகுமார தலைமையிலான அரசா ங்கத்தினை அவதானித்துக் கொண்டி ருக்கின்றோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலளித்து விட்டு நகர்ந்து சென்றுள்ளார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# பிரிட்டன் தொலைக்காட்சி தொடரில் குழந்தை நட்சத்திரமாக பிரபலமான லொஸ்ஏஞ்சல்ஸ் காட்டுத் தீயில் சிக்கி பலி

பிரிட்டனின் தொலைக்காட்சி தொடர்களில் குழந்தை நட்சத்திரமாக தோன்றி புகழ்பெற்ற ரோரி கலம் சைக்ஸ் லொஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

1990களில் கிடிகப்பெர்ஸ் என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தோன்றி பிரபலமான ரோரி கலம் சைக்ஸ் மாலிபுவில் உள்ள அவரது பங்களாவில் கார்பன்மொனாக்சைட் வாயுவை சுவாசித்ததால் உயிரிழந்தார் என அவரது தாயார் தெரிவித்துள்ளார்.


பெருமூளை வாத நோயால் பாதிக்கப்பட்ட தனது மகனை காட்டுத் தீயிலிருந்து காப்பாற்றுவதற்கு தான் மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை என தாயார் ஷெலி சைக்ஸ் தெரிவித்துள்ளார்.

எனது மகன் வீடு தீயில் சிக்குண்டது, நான் அவரை காப்பாற்ற முயற்சித்தேன் ஆனால் தண்ணீர் வரவில்லை அது நிறுத்தப்பட்டிருந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் தீயணைப்பு பிரிவினரின் உதவியை கேட்பதற்காக ஓடினேன், ஆனால் நான் திரும்பி வந்த போது மகன் இருந்த பகுதி முற்றாக தீக்கிரையாகியிருந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

அம்மா என்னை விட்டு விட்டு போகாதே என அவன் அலறினான், எந்த தாயும் அவ்வாறான சூழ்நிலையில் தனது மகனை விட்டு விட்டு போகமாட்டாள், எனது கை உடைந்திருந்தது அதனால் அவரை தூக்க முடியவில்லை என தாயார் தெரிவித்துள்ளார். எனது அழகான மகனின் மரணத்தினால் நான் முற்றாக மனதுடைந்துள்ளேன் என சமூக ஊடகத்தில் பதிவு செய்துள்ள அவர் லாஸ்வேர்ஜெனெஸ் நீரை





நிறுத்தி விட்டதால் என்னால் தீயை அணைக்க முடியவில்லை 50 தீயணைப்பு வீரர்கள் இருந்தும் அவர்களிடம் தண்ணீர் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினால் க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் இலக்கை அடைய முடியும் - சரத்பொன்சேகா

ஜனாதிபதியின் க்ளீன் ஸ்ரீலங்கா செயற்திட்டம் வெற்றி பெற வேண்டுமாயின் ஒட்டு மொத்த மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஒரு வாரத்துக்கு மாத்திரம் வீதியைத் துப்புரவு செய்வதால் நாட்டை தூய்மைப்படுத்த முடியாது. சட்டத்தை முறையாக அமுல்படுத்தினால் இலக்கை அடைய முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் க்ளீன் ஸ்ரீலங்கா செயற்திட்டம் சிறந்தது. அரசியல் நோக்கத்துக்கு இந்த திட்டத்தைச் செயற்படுத்தக் கூடாது. நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் மக்கள் மத்தியிலிருந்து புதிய மாற்றங்கள் தோற்றம் பெற வேண்டும். சிங்கப்பூர் நாட்டில் க்ளீன் செயற்திட்டம் ஆரம்பமான போது அரசாங்கத்துக்கு அந்நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

கொழும்பு பொது நூலகத்தில் 13 ஜனவரி 2025 திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தொடர்பான விசாரணைகள் தற்போது இரகசியமான முறையில் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அதன்படி பசில் ராஜபக்சவுடன் கடந்த காலங்களில் நெருக்கமாக செயற்பட்ட வர்த்தகத் துறையினர், முக்கிய அதிகாரிகள் போன்றோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# கனடாவில் சுகாதார தலைமை பொறுப்புக்கு 2 தமிழர்கள் நியமனம்

கனடாவில் முக்கிய பொறுப்புகளில் இலங்கையை சேர்ந்த தமிழர்கள் ஆதிகம் செலுத்தி வருகின்றனர். இந்நிலையில் தமிழர்கள் அதிகம் செறிந்து வாழும் பகுதியிலுள்ள வைத்திய சாலைக்கு இலங்கையை சேர்ந்த தமிழர்கள் இருவர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

Scarborough Health Network வைத்தியசாலைகளில் இரண்டு பிரதான பொறுப்புகளில் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆறாம் திகதி இவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய வைத்தியர் இளச்செழியன் அம்பலவாணர் அவர்கள் அவசர சிகிச்சை பிரிவின் புதிய தலைமை பதவியையும், வைத்திய இயக்குநர் பதவி





யையும் ஏற்றுள்ளார்.

அத்துடன் அவசர சிகிச்சை பிரிவின் துணைத் தலைவராக வைத்தியர் மயோரேந்திரா ரவிச்சந்திரன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். குறித்த இரண்டு தமிழரும் சுகாதார தலைமை பொறுப்புகளில் நீண்ட கால அனுபவம் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியப் பாராளுமன்றத்தில் தமிழர் பிரச்சனையை கனிமொழி ஊடாக முன் நகர்த்த நடவடிக்கை?



இலங்கைத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தினை பாரதப் பாராளுமன்றத்திற்கு முன்னகர்த்தி அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்றக்குழுத் தலைவர் கனிமொழி ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கனிமொழி தலைமையில் விரைவில் தி.மு.க.வின் பாராளுமன்ற உறுப்பினர்களையும், வெவ்வேறு மாநிலங்களின் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்திப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சென்னையில் நடைபெற்ற அயலகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்பதற்காகச் சென்றிருந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகியோருக்கும் தி.மு.க.பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழிக்கும் இடையில் கடந்த வெள்ளிக் கிழமையன்று மாலையில் பிரத்தியேக சந்திப்பொன்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் பாராளுமன்றக்குழுவின் தலைவர் கனிமொழிக்கும் எமக்கும் இடையில் சுமார் ஒன்றரை மணிநேரமாக கலந்துரையாடல்கள் இடம் பெற்றது. இதன்போது தமிழர்களின் பிரச்சினைகளை பாரதப் பாராளுமன்றத்திற்கு எடுத்துச் செல்வதன் ஊடாக மத்திய அரசாங்கத்திற்கு எவ்வாறு அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் என்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அதனடிப்படையில் முதற்கட்டமாக தி.மு.க.வின் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள தேசியப் பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக உரையாடுவதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து எடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

அத்துடன், அடுத்த கட்டமாக வெவ்வேறு மாநிலங்களில் உள்ள எதிர்க்கட்சியின் உறுப்பினர்களுடன் தமிழர்களின் விடயம் சம்பந்தமாக பேச்சுக்களை முன்னெடுத்து அவர்களின் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன் ஊடாக, பாரதப் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் மத்திய அரசாங்கத்திற்கு கணிசமானதும், காத்திரமானதுமான அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநேரம், புதிய அரசாங்கத்தின் வாக்குறுதிகள் மற்றும் செயற்பாடுகள் பற்றியும் கனிமொழியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.வடமராட்சி கடலில் கரையொதுங்கிய கண்ணன் ராதை சிலை! காணக் குவியும் மக்கள்

வடமராட்சி கிழக்கு, வத்திராயன் கடற்கரை பகுதியில் கண்ணன் ராதை ஆகிய இரு தெய்வங்களும் இணைந்த சிலை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

அண்மைக் காலமாக காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்களினால் கடல் சீற்றங்கள், சூறாவளி, புயல்கள், தென்கிழக்கு ஆசியாவின் பல நாடுகளில் ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்தோனேசியா, மலேசியா அல்லது இந்தியா, போன்ற ஏதாவது ஒரு நாட்டில் இருந்து இந்த சிலை வந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. இந் நிலையில் குறித்த சிலையை



பார்வையிடுவதற்காக அதிகளவான மக்கள் அந்த பகுதியில் குவிந்து வருகின்றனர்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்! உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600

# வடக்கு கிழக்கில் தலைமைத்துவம் என்றால் என்ன என்பதை அறியாத இன்றைய தலைமுறை



வடக்கிலும் கிழக்கிலும் தலைமைத்துவம் என்றால் என்ன பண்பு, பண்பாடு பக்குவம் என்ன என்று தெரியாத நிலையில் இன்றைய தலைமுறை இருக்கின்றது. இன்றைய தலைமுறைக்கு யார் தலைவர், தலைமை யார், தலைவருக்கு இருக்க வேண்டிய பண்பு என்ன, பண்பாடு என்ன பக்குவம் என்ன என்பதை தெரியாதவர்களாக இருக்கிறார்கள். இதனால் பல துன்பங்களை துயரங்களை அனுபவித்து வருகின்றோம் என சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

அன்னை, சிவத் தமிழ்ச்செல்வி பண்டிதை கலாநிதி, தங்கம்மா அப்பாக்குட்டி ஜனனதினம் 07 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமை தெல்லிப் பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் அன்ன பூரணி மண்டபத்தில் அதன் தலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது. இதன் போது உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார் அவர் மேலும் உரையாற்றுகையில்,

இன்றைய சூழலில் விமர்சனங்கள் பேசுவது வீண் வார்த்தைகள் பேசுவது அதிகரித்துக் கொண்டு செல்கின்றது இதனால் ஈழத்தமிழர்களுக்கு விடிவு இல்லாது இருக்கின்றார்கள் வீண் வார்த்தைகள் பேசுபவர்கள் ஒழுங்கான விடையங்களைச் செய்வதற்கு முன்வர வேண்டும் இவ்வாறான விடயங்களை செய்பவர்கள் குறைவாகவே இருக்கின்றார்கள்.

வீண்வார்த்தை பேசுவதை விட பயனுள்ள விடயங்களைச் செய்வார்கள் என்றால் சமூகம் பயன் பெறும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் தூர நோக்கம் தீர்க்க தரிசனம் காரணமாக கோவில், அன்னையின் பிள்ளைகள், பெரும் விருட்சமாக வளர்ந்து சமூகப்பணிகளை ஆற்றி வருகின்றார்கள்.

அன்னையின் பணிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக அன்னையைப் பற்றிய நூல்கள் அன்னையின் பாடல்கள், சைவ நூல்கள் அச்சிடப்பட்டு வெளியிட்டு வருகின்றனர் நூற்றாண்டு மலரையும் அச்சிட்டு வெளியிட்டுள்ளோம்.

பெற்ற தாய் தகப்பனுக்கு மாடி வீடு கட்டியிருந்தாலும் அவர்கள் இல்லாத போது துவசம் செய்வார்கள் பின்னர் கோவிலில் அர்ச்சனை செய்வர்கள் அதன் பின் மறந்து விடுவார்கள் ஆனால் எங்கள் அன்னைக்கு வருடத்தில் இரண்டு நாட்கள் திருவிழாக்கள் எடுத்து வருகின்றோம்.

அன்னையின் நிழலில் வாழுகின்ற பிள்ளைகள் கல்வி கற்று பட்டதாரிகளாக்கி ஆலயச் சூழலில் வீடுகளை கட்டி வழங்கியுள்ளோம்.

அன்னையின் தீர்க்க தரிசனத்தால் கோவில்கள் சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றது அன்னையின் பெயரில் பல நிதியங்களை உருவாக்கி வைத்தியசாலைகள், பாடசாலைகள் உதவிகள் செய்து வருவதோடு பசியோடு வருபவர்களுக்கு உணவுகளை வழங்கி வருகின்றது.

பல சத்திரங்கள் மடங்கள் இருந்த நிலையில் இன்று அவை கொத்துரெட்டிக் கடைகளாக மாறியுள்ளது பல மடங்கள் குறிப்பாக அன்னை சத்திர மடம் கடையம்மா மடம் கந்தர் மடம் இன்று இல்லாது போயுள்ளது.

எத்தனையோ சிறந்த தலைமைத்துவங்களைக் கொண்ட வடக்கு கிழக்கில் இன்றைய தலைமுறைக்கு தலைமைத்துவம் என்றால் என்ன தலைமைத்துவத்திற்கு இருக்க வேண்டிய பண்பு பண்பாடு பக்குவம் தெரியாத நிலையில் இருக்கின்றார்கள் இந்த நிலையில்தான் துன்பங்கள் துயரங்களை நாங்கள் அனுபவித்து வருகின்றோம் என்றார்.

# கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தை நிர்வகிப்பது யார்? சிறிதரன் ஆதரவுக்குழுவா? போராளிகள் நலன் காப்பகமா? சிங்களப் பொலிசார் களத்தில் இறங்கி சமாதானப்படுத்தினர்



கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தை நிர்வகிப்பது யார் என்ற சர்ச்சையினால் ஏற்பட்ட அமைதியின்மை சூழ்நிலையை பொலிஸார் தலையிட்டு கட்டுப்படுத்தினர். கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்பதற்காக மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பக தரப்புகள் முனைந்த போது இந்த அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் நினைவேந்தலுக்காக 2016ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டது. இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் பிரதான சுடரினை ஏற்றி மாவீரர் குடும்பங்களும் சுடரேற்றியதையடுத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிலையில், அங்கு தொடர்ந்து 9 ஆண்டுகளாக நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தும் இந்த மாவீரர் துயிலும் இல்லம் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், கடந்த வருடம் பிரதான சுடர் ஏற்றுவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக துயிலுமில்ல நிர்வகிப்பு தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது. மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பு மாவீரர் துயிலும் இல்லங்கள் பொது மயப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

11 ஜனவரி 2025 தினம் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் நிர்வாகத் தெரிவை நடத்த அழைப்பு விடுத்திருந்தனர். இந்நிலையில், அப்பகுதிக்கு சென்றவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், தற்போது உள்ள நிர்வாகத் தரப்பே தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என வலியுறுத்தினர். இதனையடுத்து, அப்பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் அமைப்பினது அழைப்பின் பேரில் சென்ற மக்களுக்கு அவ்வேளை எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அப் பகுதியில் அமைதியின்மை தொடர்ந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸார் அங்கு சென்றனர். அப்பகுதியில் கூட்டமாக நிற்க வேண்டாம் எனவும், பிரச்சினைகள் இருப்பின் பொலிஸில் முறைப்பாடு செய்யுங்கள் எனவும் தெரிவித்து அங்கிருந்த மக்களை வெளியேற்றினர்.

படிப்படியாக அங்கிருந்த மக்களை வெளியேற்றிய பொலிஸார் அமைதியின்மையை கட்டுப்படுத்தினர்.

இதேவேளை குறித்த மாவீரர் துயிலுமில்ல வளாகத்துக்குள் அத்துமீறி செல்ல வேண்டாம் என்ற அறிவித்தல் போஸ்டரை கரைச்சி பிரதேச சபையினர் ஒட்டியிருந்தனர். இவ்விடயம் தொடர்பில் முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சுப்பையா கூறுகையில், மக்களின் நினைவேந்தலை தடுக்கும் வகையிலும் நிகழ்ச்சி நிரல் ஒன்றின் அடிப்படையிலும் மாவீரர் போராளிகள் குடும்ப நலன்



காப்பகம் எனும் அமைப்பு செயற்படுவதாக தெரிவித்தார்.

அதற்கு ஒரு. போதும் அனுமதிக்க முடியாது. இதுவரை நடந்த நடைமுறைகளே பின்பற்றப்பட்டு நினைவேந்தல்கள் நடைபெறும். மக்கள் தெளிவாக செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பின் தலைவர் பார்த்தீபன் தெரிவிக்கையில், மக்கள் மயப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை அமைக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இன்று சிறிதரனுடன் தொடர்புடைய சிலர் அங்கு குழப்பங்களை ஏற்படுத்தினர். நாகரிகமற்ற வார்த்தைகளை பேசினர். தொடர்ந்தும் சிறிதரனின் அரசியலுக்குள் துயிலும் இல்லங்களை அனுமதிக்க முடியாது. சிறிதரன் தனது வாக்குக்காக கனகபுரம், முழங்காவில், தேராவில், சாட்டி ஆகிய துயிலுமில்லங்களை பயன்படுத்துகிறார். அரசியலுக்குள் சிக்கியுள்ள துயிலும் இல்லங்களை மக்கள் மயப்படுத்த வேண்டும். அதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம் என தெரிவித்தார்.

மாவீரர் துயிலும் இல்லங்களை அரசியல் மயப்படுத்தி, முன்னாள் போராளிகளுக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்துவது தொடர்பில் பலரும் அதிருப்தி வெளியிடுகின்றனர்

# அநுர அரசாங்கத்தில் அதிகாரப் பகிர்வுக்கான சாத்தியம் மறைவு! தமிழ் அரசியல்வாதிகள் செய்த 10 பாவங்களைப் பட்டியலிடும் தயான்



ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கான அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான அதிகாரப்பகிர்வுக்குரிய சாத்திய நிலைமைகள் மறைந்து வருகின்றன என்று குறிப்பிட்டுள்ள கலாநிதி.தயான் ஜயத்திலக்க கடந்த காலத்தில் தமிழ் அரசியல்வாதிகள் செய்துள்ள பத்து பாவங்களையும் பட்டியலிட்டுச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் சம்பந்தமாக தனது கருத்துக்களை வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளுக்கான தீர்வினைக் காண்பதற்கு 1987ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி இந்திய, இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னணியில் உருவான 13ஆவது திருத்தச்சட்டத்தினை அடுத்து இரண்டு சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அச்சமயத்தில் தமிழ்த் தேசிய அரசியல் வாதிகளில் சிலர் 13ஆவது திருத்தச் சட்டத்தினை கடுமையாக எதிர்த்தார்கள். சிலர் 13ஆவது திருத்தச்சட்டத்தினை உடன் அமுலாக்குவதற்கு முயற்சித்தார்கள். ஆனால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளில் எவரும் அதனை முறைப்படியாக நடைமுறைப்படுத்தி பரிநாம ரீதியான வளர்ச்சியை அடைந்து அதிகாரப் பகிர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கவில்லை.

இதன்காரணமாக, தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் பத்து பாவச் செயல்களை இழைத்துள்ளார்கள் என்பது எனது நிலைப்பாடாகிறது. அவர்கள் செய்துள்ள அந்தப் பத்து பாவச்செயல்களை நான் பட்டியலிடுகின்றேன். அதில் முதலாவதாக, தமிழ் நாடு வழியாக டில்லிக்கு ஆணையிட முடியும் என்று கருதியமையாகும். இரண்டாவதாக, புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு காணப்படும் மேற்கத்தேய ஆதரவானது டில்லியை விடவும் முக்கியமானது என்று கருதியமையாகும்.

மூன்றாவதாக, தெற்கில் இந்திய எதிர்ப்பு மற்றும் அதிகாரப்பகிர்வு ஆகியவற்றுடன் ஜே.வி.பி மிக வேகமாக வளர்ந்து கொண்டிருந்த தருணத்தில், மாநில அதிகாரத்துக்கான அதிகாரப் பகிர்வு நூலில் தொங்கிக் கொண்டிருந்த தருணத்தில் 13ஆவது திருத்தச்சட்டத்தினை வரதராஜப் பெருமாள் தலைமையிலான மாகாண அரசு உடனடியாக அமுலாக்குவதற்கு முனைந்தமையாகும்.

நான்காவதாக, இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக தனிநாடு கோரிப் போரிட்டு வந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரிப்பதன் ஊடாக 13ஆவது திருத்தத்தைக் கடந்து அப்பால் செல்லதற்கு முயன்றமையாகும்.

ஐந்தாவதாக, தமிழ் மக்களுக்கு அதிகாரப்பகிர்வை வழங்குவதற்கு சாதகமான மனோநிலையில் இருந்த இந்திய முன்னாள் பிரதமர் ரஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் அந்த ஆதரவைப் பெறுவதற்கு முயன்றமையாகும்.

ஆறாவதாக, பிரபாகரன் மரணிக்கப்பட்டு விடுதலைப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படையாகவோ,(22ம் பக்கம் பார்க்க)

# எந்தக் காலத்திலும் ட்ரம்பின் கனவு நிறைவேறாது! மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ள கனடா பிரதமர்



அமெரிக்காவின் 51வது மாகாணமாக மாற கனடாவுக்கு எந்த நோக்கமும் இல்லை என்று கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மீண்டும் வலியுறுத்தியுள்ளார். அப்படியான ஒரு சூழல் எந்த காலத்திலும் உருவாகப் போவதில்லை என்றும் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

முன்னாள் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகியுடன் பேசுகையில், கனடா அமெரிக்காவின் ஒரு பகுதியாக மாறக்கூடும் என்று டொனால்டு ட்ரம்ப் மீண்டும் மீண்டும் கூறி வரும் கருத்துக்கள் குறித்து ட்ரூடோ விவாதித்துள்ளார். ட்ரம்பின் சூழ்நிலை தமக்கு தெரியும் என குறிப்பிட்டுள்ள ட்ரூடோ, 51வது மாகாணம் என்பது வெறும் கனவு மட்டுமே, எந்த காலத்திலும் அது நிறைவேறப் போவதில்லை என்றார்.

பெடரல் தேர்தலுக்கு முன்னதாக கருத்துக் கணிப்புகளில் அதிகரித்து வரும் செல்வாக்கின்மைக்கு ஆளான பிரதமர் ட்ரூடோ, தனது லிபரல் கட்சி புதிய தலைவரைத் தெரிவு செய்த பிறகு மார்ச் மாதம் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதனிடையே கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பது குறித்து ட்ரம்ப் சமீபத்தில் மீண்டும் மீண்டும் கருத்து தெரிவித்து வருகிறார். மட்டுமின்றி, கனடா பிரதமரை சிறுமைப்படுத்தும் வகையில், ஆளுநர் ட்ரூடோ என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்பின் அப்படியான கருத்துக்களை தாம் பொருட்படுத்துவதில்லை என்றே ட்ரூடோ ஞாயிறன்று தெரிவித்துள்ளார். மேலும், கனடா அமெரிக்காவில் சேராததற்கு ஒரு பெரிய காரணம், கனடியர்கள் அதை விரும்பவில்லை என ட்ரூட்டோ குறிப்பிட்டுள்ளார்.

கனடாவிலிருந்து வரும் பொருட்களுக்கு 25 சதவிகித வரிகளை அமுல்படுத்தும் திட்டத்தை ட்ரம்ப் அறிவித்ததிலிருந்து, ட்ரம்ப் மற்றும் கனடா இடையே மோதல் போக்கு அதிகரித்துள்ளது.

ட்ரம்பின் இந்த நடவடிக்கை கனடாவின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதுடன் பழிவாங்கும் வரி விதிப்புகளுக்கு வழிவகுக்கும் என்றே அஞ்சப்படுகிறது.

கனடாவிலிருந்து வரும் மின்சாரம் அல்லது எண்ணெய் மற்றும் எரிவாயுவுக்கு எந்த அமெரிக்கரும் 25 சதவீதம் அதிகமாக செலுத்த விரும்பவில்லை என்றே ட்ரூடோ குறிப்பிட்டுள்ளார்.

# நாங்கள் முதுகெலும்பு உடையவர்கள்! ட்ரம்பிற்கு முன்னாள் பிரதமர் பதிலடி!



அடக்குமுறைக்கு எதிராகக் குரலெழுப்புவதில் நாங்கள் முதுகெலும்புடையவர்கள். எனவே கனடா ஒருபோதும் அமெரிக்க மாகாணமாகாது என அந்நாட்டின் முன்னாள் பிரதமர் ஜீன் கிரெட்டியன் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ட்ரம்பிற்கு பதிலடி கொடுத்துள்ளார்.

1993 முதல் 2003 வரை கனடா பிரதமராகப் பதவி வகித்த ஜீன் கிரெயட்டியன், தனது 91-ஆவது பிறந்த நாளையொட்டி 'தி குளோப் அண்ட் மெயில்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் அவர்; கூறியிருப்பதாவது:

உலகில் சிறந்த நாடான கனடாவை விட்டு விட்டு எங்கள் நாட்டு குடிமக்கள் அமெரிக்காவுடன் இணைவார்கள் என உங்களால் எவ்வாறு எண்ண முடிந்தது. கனடா மட்டுமன்றி பிற ஐரோப்பிய நாடுகளையும் அமெரிக்காவுடன் இணைத்து அதை விரிவாக்க நினைக்கிறீர்கள். இந்த விவகாரத்தில் மற்ற நாடுகள் அமைதி காக்கலாம். ஆனால், உங்கள் திட்டம் கனடாவில் ஒரு போதும் ஈடேறாது. எங்களை அச்சுறுத்தி, அவமதிப்பதால் வெற்றி பெற்று விடலாம் என நீங்கள் நினைப்பது, உங்களின் விழிப்புணர்வற்ற நிலையை வெளிக்காட்டுகிறது.

நாங்கள் பழகுவதற்கு இனிமையானவர்களாக, எளிதாக அணுகக்கூடியவர்களாக தெரியலாம். ஆனால் அடக்குமுறைக்கு எதிராகக் குரலெழுப்புவதில் நாங்கள் முதுகெலும்புடையவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கனடாவின் இறையாண்மையைக் காக்க இறுதி வரை போராடுவோம்!- ஜக்மீத்சிங்

கனடாவின் இறையாண்மையை காக்க போராடப் போவதாகவும் கனடா ஒருபோதும் விற்பனைக்கு அல்ல எனவும் ட்ரூடோவின் முன்னாள் கூட்டணிக் கட்சித் தலைவரான ஜக்மீத் சிங் உறுதிபட தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக இணைக்கப் போவதாக தெரிவித்து வருவதுடன் அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை கனடாவின் ஆளுநர் எனவும் விமர்சித்து வருகிறார்.

எனினும் ட்ரம்பின் விமர்சனத்திற்கு ட்ரூடோ, கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பது சாத்தியமில்லை என தெரிவித்து பதிலடி கொடுத்திருந்தார்.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ள நிலையில் ட்ரூடோவின் முன்னாள் கூட்டணிக்கட்சியான New Democratic Party (NDP) கட்சியின் தலைவரான ஜக்மீத் சிங், டொனால்ட் ட்ரம்புக்கு நான் கூறும் செய்தி ஒன்று உள்ளது. கனடா விற்பனைக்கு அல்ல, இப்போதும் அல்ல, எப்போதுமே அல்ல, என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளதாவது, கனடாவின் இறையாண்மையைக் காப்பாற்ற கடுமையாகப் போராட கனேடியர்கள் தயாராக இருக்கிறார்கள். அமெரிக்காவில் காட்டுத்தீ பற்றி எரிகிறது. அதை அணைக்க கனேடிய தீயணைப்பு வீரர்கள் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்கள். அது தான் கனேடியர்களாகிய நாங்கள், அதாவது, பக்கத்து நாட்டுக்கு ஒரு ஆபத்து என்றால் உதவி செய்ய ஓடோடி வருவோம்.

ஆனால், அதற்காக எங்களுடன் சண்டைக்கு வரலாம் என ட்ரம்ப் நினைப்பாரானால், அதற்கு அவர் விலை கொடுக்க வேண்டியிருக்கும். ட்ரம்ப் கனேடிய பொருட்கள் மீது வரி விதிப்பாரானால், பழிக்குப் பழி நடவடிக்கையாக நாங்களும் வரி விதிப்போம். அடுத்து யார் கனடாவின் பிரதமராக வந்தாலும் அதைத் தான் செய்வார்கள் என்று நான் நினைக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# Condo வாங்குவது நல்லதா? வீடு வாங்குவது நல்லதா?

Condo வாங்குவது நல்லதா? வீடு வாங்குவது நல்லதா? என்ற தடுமாற்றம் பலருக்கு இருக்கும். இதற்கான பதிலை ஆராய்வதே இக் குறிப்பு.

ஒன்ராறியோவில் இரண்டு விதமான வீட்டுத் திட்டங்கள் உள்ளன. ஒன்று Condo வீடுகள் மற்றது Free Hoid வீடுகள். Condo வீடுகள் என்பது அடுக்கு மாடிகள்(Appatments) Stacked town House ஒன்றுக்கு மேல் ஒன்று (தொடர்வீடுகள்) தனி வீடுகளும் அமையும். Free Hoid வீடு என்பது town House, Semi வீடு (இரு வீடு சேர்ந்து இருப்பது) தனி வீடும் உண்டு.

இரண்டு வீடுகளுக்கும் உள்ள வித்தியாசம் Condo வீடுகளுக்கு பராமரிப்புக் கட்டணம் உள்ளது. ஆனால் வீட்டு வரி குறைவானது. நிலம் உங்களுக்குச் சொந்தமில்லை.

Free Hoid வீடுகளுக்கு பராமரிப்புக் கட்டணம் இல்லை. ஆனால் வீட்டு வரி அதிகம். நிலம் சொந்தம். ஆனால் இரண்டு வீடுகளுக்கும் வருட முடிவில் வரும் செலவுகளைக் கணப்புப் பார்த்தால் அதிக வித்தியாசம் இல்லை.

இரண்டு வீட்டிலும் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. Condo வீடுகளில் இருக்கும் நன்மை வெளி வேலைகள் அனைத்தும் நிர்வாகமே பொறுப்பு. சினோ துப்பரவு புல் வெட்டுதல் குப்பை எடுப்பது மின்சாரம் தண்ணீர் Gas அனைத்தும் பராமரிப்புக் கட்டணத்திற்குள் அடங்கும்.

Free Hoid வீடுகளில் வீட்டு உரிமையாளர்களே அனைத்துக்கும் பொறுப்பு என்பது முக்கியமான விடயம். Condo வீடுகளை விட Free Hoid வீடுகளின் விலைகள் அதிகம். ஆனால் Free Hoid வீடுகளின் வருடாந்த விலை அதிகரிப்பு அதிகமாக இருக்கும்.

இது பற்றிய மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால் வீடு விற்பனைத் துறையில் 22 வருட அனுபவம் வாய்ந்த என்னை நம்பிக்கையுடன் அழையுங்கள். நன்றி




# நாளை திருமலையில் கூடுகிறது தமிழரசுக்கட்சியின் மத்திய குழு

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் நாளை 18ஆம் திகதி பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் தலைமையில் நடைபெறவுள்ளது. திருகோணமலையில் உள்ள சிவில் அமைப்பொன்றின் கேட்போர் கூடத்தில் குறித்த தினமன்று காலை பத்து மணிக்கு கூட்டம் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கூட்டத்தின் போது கட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கு, கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய பார்வை, மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மாநாடு உள்ளிட்ட விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதோடு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதேநேரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்னெடுத்து வரும் புதிய அரசியலமைப்பு விடயத்தினை தமிழ்க் கட்சிகள் கூட்டாக கையாளுதல் விடயத்தில் தமிழரசுக்கட்சியின் வகிபாகம் தொடர்பிலும் தீர்மானம் எடுக்கப்படலாம் என்று அக்கட்சியின் நம்பிக்கைக்குரிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# தென்னிலங்கை கட்சிகளுக்கு வாக்களித்தோர் தம் முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் - 51வது ஆண்டு நினைவில் சி.வி.கே. சிவஞானம்




தெற்கின் தலைமைத்துவ பிரதிநிதித்துவத்திற்கு வாக்களித்தவர்கள் தங்கள் முடிவுகளை மீள்பரிசிலினை செய்து எதிர்காலத்தில் தமிழ் தேசியத்துடன் இருக்கின்றவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று இலங்கை தமிழரசு கட்சியின் பதில் தலைவரும் வட மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

உலகத் தமிழராய்ச்சி மாநாட்டு படுகொலையின் 51வது ஆண்டு நினைவேந்தல் 10 ஜனவரி 2025 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் உலக



தமிழராட்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்கள் நினைவுத் தூபியில் இடம் பெற்றது. நினைவேந்தலில் உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது தமிழ்மக்கள் என்னசூழலில் வாழ் கிறார்கள் என்பதை தமிழ்மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எதற்காக எத்தனை ஆயிரம் உயிர்கள் கொலை செய்யப்பட்டன? காணாமல் ஆக்கப்பட்டன? ஏதற்கான நினைவு தினங்கள் செய்யப்படுகின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். வரலாறுகளை மறக்க கூடாது.

இந்த மண்ணில் தமிழர்களுக்கான ஆராய்ச்சி மாநாட்டு தமிழர் நிலத்தில் நடைபெறக் கூடாது என்பதில் அன்றைய அரசாங்கம் தெளிவாக இருந்தது. அதை எதிர்த்துத்து தான் தமிழர் ஆராச்சி மாநாடு இங்கு நடந்தது. இன்று தெற்கத்தைய ஆதிக்கம் தமிழர் விரோத செயற்பாடு மிகத் தெளிவாக இடம் பெறுகின்றது. அதில் நாங்களும் எங்களுடைய மக்களும் திசை மாறிப் போகின்ற சூழ்நிலை காணப்படுகின்றது.

இறுதியாக நடந்த பாராளுமன்றத் தேர்தலில் மிக அதிர்ச்சி ஊட்டும் வகையில் தெற்கத்தைய தலைமைகளை பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்திருக்கின்றார்கள். இது எங்களுடைய வரலாற்றை புரிந்து கொள்ளாத நிலையில் ஏற்பட்டது.

எங்களுக்குள் இருக்கின்ற கருத்து வேறுபாடுகள் எதுவாக இருந்தாலும் சரி தலைமைத்துவம் எங்கள் மக்களுடைய பிரதிநிதித்துவம் எங்களுடைய தலைமைத்துவமாக இருக்க வேண்டுமே தவிர தெற்கத்தைய தலைமைத்துவத்துக்குட்பட்டதாக இருக்க முடியாது. தமிழ் மக்கள் மீதான மேசமான நடவடிக்கைகள் காராணமாகத்தான் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடாத்தப்பட்டது. அதுவும் அரசாங்கத்தை எதிர்த்துத்தான் இந்த ஆராய்சி மாநாடு நடாத்தப்பட்டது.

இதன் போது இடம்பெற்ற தாக்குதல் தான் தமிழ் மக்களுடைய தற்காப்பு போராட்டத்திற்கு வித்திட்டது. இதற்குப் பின்னால் தான் ஆயுதப் போராட்டங்கள் பரிணமித்தது இதை எல்லாவற்றையும் எமது மக்கள் நினைவில் கொள்ள வேண்டும். இனி மேலும் தெற்கத்தைய தலைமைத்துவத்துக்குப் போகாது தமிழ் தலைமைத்துவத்துக்குள் அது எதுவானாலும் அவர்களை ஆதரிக்க வேண்டும் தெற்கத்தைய தலைமைத்துவத்துக்கு வாக்களித்தவர்கள் மீள்பரிசீலனை செய்து இனிமேல் வருகின்ற தேர்தல்களுக்கு தமிழ்த் தேசியத்திற்கு பலமாக நிற்பவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். எத்தகைய பாதக செயல்களுக்குள் நாங்கள் வாழ்கின்றோம் என்பதை மக்கள் உணர வேண்டும் என்றார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளின் 51 ஆவது ஆண்டு நினைவேந்தல் 10 ஜனவரி 2025 காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது உயிரிழந்த ஒன்பது உறவுகளையும் நினைவுகூரி அமைக்கப்பட்ட நினைவுத்தூபியின் முன் சி.வி.கே சிவஞானத்தினால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டு அக வணக்கம் செலுத்தப்பட்டது.

இதன்போது வட மாகாண அவைத் தலைவரும் இலங்கை தமிழரசு கட்சியின் பதில் தலைவருமான சி.வி.கே சிவஞானம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் சர்வேஸ்வரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரான சுகிர்தன், யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் ஆர்னோல்ட், இலங்கை தமிழரசு கட்சியின் நிர்வாக செயலாளர் குலநாயகம் சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# Vaughan இல் ஏறிய தமிழ் மரபுத் திங்கள் கொடி

வோன் நகரமும் தமிழ் சமூகமும் வரலாற்றில் ஒரு முக்கியமான அடையாளத்தை சேர்த்துள்ளன. வோன் நகர மன்றத்தில் மதியம் 1.00 மணிக்கு முதல் முறையாக தமிழ் மரபுத் திங்கள் கொடி ஏற்றப்பட்டது. இந்த விழா தமிழர் பெருமையைச் சொல்லும் ஒரு நிகழ்வாகவும், நகரத்தின் இனம் தொறும் ஒற்றுமையையும் பொலிவு பெறும் நிகழ்வாகவும் அமைந்தது.

Steven Del Duca நகர முதல்வரின் முக்கிய உரை: இந்தக் கொடியேற்ற விழாவில் வோன் நகர முதல்வர் சிறப்பு உரையாற்றி, தமிழ் சமூகத்தின் பங்களிப்புக்களைப் பாராட்டினார். அதாவது



'தமிழ்ச் சமூகத்தின் ஒற்றுமை, பணிவு மற்றும் சமூகத்தின் நலனுக்கான பெரும் பங்களிப்புகள் வோனின் பன்முகத்தன்மையை மேலும் பிரகாச மாக்குகின்றன.' என்றார்.

நகர முதல்வர் மேலும் பேசுகையில், இந்த கொடியின் உயர்வு, ஒரு நகர மாக எம் அனைவரையும் இணைக்கும் நினைவுட்டலாகவும், பன்முகத் தன்மையைப் பாதுகாக்கும் எங்கள் உறுதிபாட்டை வெளிப்படுத்துவதாகவும் விளங்குகிறது. தமிழ்ச் சமூகத்தின் பணிவும், பாரம்பரியத்தை தக்க வைத்துக் கொள்வதற்கான உறுதிப்பாடும் ஏனைய சமூகங்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.' என்றார்.

வோன் நகரில் தமிழ் மரபுத் திங்கள் கொடி ஏற்றும் நிகழ்வின் போது, வோன் தமிழ் மரபு மற்றும் கலாசார அமைப்பின் தலைவர் திரு. கண்ணன் குமரசாமி உரையாற்றி, இந்த நிகழ்வின் சிறப்பைக் குறிப்பிடுகையில், இன்று எங்கள் சமூகத்திற்கும் நகரத்திற்கும் வரலாற்று சிறப்பு மிக்க நாள் என்றும், இந்த கொடி எங்கள் செழுமையான மரபை, உறுதியை, தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குறிக்கிறது என்றும், கனடாவின் பன்முகத்தன்மையைக் கொண்டு வாழ்ந்தாலும், நமது பாரம்பரியத்தை பேணுவதின் அவசியத்தை நினைவூ ட்டுகிறது என்றும் கூறினார். தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சியும், வோன் நகரின் முன்னேற்றத்திற்கான பங்களிப்புகளும் இந்நிகழ்வில் சிறப்பிக்கப்படுகின்றன. நகர முதல்வர் மற்றும் முக்கிய தனிப்பிரிவினர்கள் நிகழ்வில் பங்கேற்று, இந்த நிகழ்வின் மூலம் வோன் நகரின் பன்முகத் தன்மையை மேலோங்கச் செய்யும் உறுதிப்பாட்டை வலியுறுத்தினர்.

திரு. கண்ணன் குமரசாமி, நகர மன்றத்திற்கும், தமிழ் சமூகத்திற்கும் வழங்கிய ஆதரவுக்கு நன்றி தெரிவித்ததுடன், இது எங்கள் சமுதாயத்தின் வருங்கால சந்ததியினருக்கான ஒரு பெருமைமிகு அடையாளமாக இருக்கும் என்றும் கூறினார். உங்கள் ஊக்கமும் ஆதரவும் எங்களுக்கு அளவில்லா மகிழ்ச்சியைத் தருகிறது. நாம் அனைவரும் சேர்ந்து எங்கள் வருங்கால சந்ததிகளுக்கான அடியினை உருவாக்கிக் கொடுக்கிறோம், என்றும் குறிப்பிட்டார்.

வோன் நகரில் நடைபெற்ற இந்த முதல் முறையான கொடி ஏற்றும் நிகழ்வு, தமிழ்ச் சமூகத்தின் பங்களிப்பையும் வோன் நகரின் பன்முகத் தன்மையை கொண்டாடும் உறுதியையும் வெளிப்படுத்தும். கல்வி முதல் பொருளாதார முன்னேற்றம் வரை, கனடியத் தமிழர்கள் கனடாவின் எதிர்கால வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்து வருகின்றனர். தமிழ் மரபுத் திங்கள் கொடி உயர்ந்து பறந்தபோது, அது வோன் நகரின் பன்முகத்தன்மை மற்றும் அந்நகர மக்களின் ஒருமைப்பாட்டின் நினைவுச் சின்னமாகவும் இருக்கின்றது. இனி வரும் நாட்களிலும் மேலும் ஒற்றுமையுடனும், ஒருமைப்பாட்டுடனும், அனைவரின் கலாச்சார பங்களிப்புகளையும் கொண்டாடும் நகர மாகவும் இருக்கும்.

- அன்பே சிவம்





# தமிழ்த் தேசிய அரசியலை மக்கள் மயப்படுத்துவது!

– நிலாந்தன் –

கடந்த ஞாயிறுக் கிழமை, குமார் பொன்னம்பலத்தின் 25ஆவது நினைவு நாள் நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பாணம் திருமறைக் கலா மன்ற கலைத் தூது மண்டபத்தில் நடந்த அந் நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் நினைவுப் பேருரை ஆற்றினார்.

ரகுராம் தெளிவான துணிச்சலான நிலைப்பாடுகளை முன் வைத்துப் பேசினார். எக்கிய ராஜ்ய என்று அழைக்கப்படுகின்ற தீர்வு முன்மொழிவை ஏன் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை அவர் முன் வைத்தார். தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்பாக குறிப்பாக ஆயுதப் போராட்டத்தின் கோரிக்கைகள் தொடர்பாகத் தெளிவான முடிவுகளை எடுத்து அதில் பேசினார்.

ஒரு கட்சி மேடையில் நிகழ்த்தப்பட்ட நினைவுப் பேருரை என்ற அடிப்படையில், அவருடைய உரை அதிகம் ஜனரஞ்சகமானதாகவும் அழுத்தமானதாகவும் இருந்தது. அந்த நினைவுப் பேருரை துணிச்சலாகவும் தெளிவாகவும் சில விடயங்களை முன் வைக்கின்றது. எனினும் அது அதற்கு அந்த வழங்கப்பட்ட தலைப்புக்கு வெளியே வந்துவிட்டது.



அந்தப் பேருரைக்கு வழங்கப்பட்ட தலைப்பு மக்கள் மயப்படுத்த வேண்டிய அரசியல். ஆனால் தமிழ் அரசியலை குறிப்பாக, என்பிபி அரசாங்கத்தின் எழுச்சிக்குப் பின்னரான தமிழ் அரசியலை. அதை விடக் குறிப்பாக கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய ஆசனங்கள் மேலும் குறைந்து போயிருக்கும் ஓர் அரசியல் சூழலில், தமிழரசியலை மக்கள் மயப்படுத்துவது தொடர்பான விடயங்கள் அந்த உரைக்குள் வரவில்லை.

அந்த உரையை ஒழுங்குபடுத்திய முன்னணி மட்டுமல்ல, தமிழரசுக் கட்சியுமுட்பட ஏனைய எந்த ஒரு கட்சியிடமாவது மக்களை அரசியல் மயப்படுத்தும் அரசியல் தரிசனங்கள் உபாயங்கள் உண்டா? மிகக் குறிப்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் காணப்படும் எல்லாக் கட்சிகளும் ஆயுதப் போராட்ட பாரம்பரியத்தில் வந்தவை. அதிலும் இடதுசாரி பாரம்பரியத்தில் வந்த கட்சிகள் உண்டு. அந்தக் கட்சிகள் எந்த ளவுக்கு இடது மரபின் அடிப்படையில் கட்டமைப்புகளை உருவாக்கி மக்கள் மத்தியில் வேலை செய்திருக்கின்றன?

ஆயுதப் போராட்ட காலகட்டத்திலும் மக்கள் போதிய அளவுக்கு அரசியல் மயப்படுத்தப்பட்டார்கள் என்று கூற முடியாது. ஆனால் பொது எதிரிக்கு எதிரான இன உணர்வுகள் அங்கே திரட்டப்பட்டன. ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு இனமாக மக்களைத் திரட்டுவது அப்பொழுது இலகுவாக இருந்தது. ஒடுக்கு முறைக்கு எதிரானது என்ற விடயத்தில் தமிழ் மக்கள் ஓரளவுக்குத் தெளிவாக இருந்தார்கள். இப்பொழுதும் இனரீதியாக சிந்திக்கும் பொழுது தமிழ் மக்கள் தெளிவாக முடிவெடுக்கிறார்கள்.

ஆனால் தமிழ்த் தேசிய அரசியலை அதன் ஆழமான அறிவியல் தளத்தில் விளங்கி வைத்திருப்பவர்கள் எத்தனை பேர்?

தேசியவாத அரசியல் என்றால் என்ன? ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாகத் திரட்டுவது. அவ்வாறு ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாகத் திரட்டுவதற்கு என்ன செய்ய வேண்டும்? ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் விடயங்களை அடையாளம் கண்டு அவற்றுக்குத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அதாவது கட்டமைப்புச் சார்ந்து ஸ்ட்ரக்சரலாக சிந்திக்க வேண்டும். ஆனால் தமிழ் அரசியலில் மட்டுமல்ல தமிழ் அன்றாட வாழ்விலும் கட்டமைப்பு சார்ந்த சிந்தனைகள் குறைவு.

நான் திரும்பத் திரும்பச் சொல்லும் ஓர் உதாரணம் உண்டு. தமிழ் மக்கள் வீடு கட்டும் பொழுது வாஸ்து சாஸ்திரம் பார்ப்பார்கள். ஏனென்றால் மதரீதியான நம்பிக்கைகளுக்கு அவர்கள் அதிகம் பயம். ஆனால் வாஸ்து முறைப்படி வீட்டைக் கட்டும் தமிழர்களில் எத்தனை பேர் அதன் அழகியல் மற்றும் துறை சார் அம்சங்கள் தொடர்பாக உரிய துறைசார் நிபுணர்களை அணுகுகிறார்கள்? துறை சார் நிபுணத்துவ அறிவைக் கொண்ட கட்டிடப்பட கலைஞர்கள் வீட்டின் மொத்த பெறுமதியில் ஒரு விகிதத்தைக் கேட்பார்கள் என்பது உண்மை.

ஆனால் ஒரு கட்டிடப்படக் கலைஞரால் கற்பனை செய்யப்பட்ட ஒரு வரைபடத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டே வீட்டைக் கட்டத் தொடங்க வேண்டும். ஆனால் எனது நண்பர் ஒருவர் கூறுவது போல மேசன் தான் ஆர்க்கிரக்ட் மேசன் தான் ஸ்ட்ரக்சரல் இன்ஜினியர் மேசன் தான் எல்லாமே என்ற ஒரு நிலைமை தான் தமிழ் மக்களுடைய அன்றாட வாழ்வில் உண்டு. இதில் தனிப்பட்ட வீடுகள் மட்டுமல்ல பொதுக் கட்டிடங்களும் அடங்கும். கட்டிடக்கலை சம்பந்தப்பட்ட துறை சார்ந்த நிபுணத்துவம், பண்பாடு சார்ந்த துறை சார் நிபுணத்துவம், மற்றும் அழகியல் அம்சங்கள் தொடர்பான துறைசார் நிபுணத்துவம் போன்றவை கவனத்தில் எடுக்கப்பட்டுக் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

இப்பொழுது புலம் பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தில் வீடு கட்டும் பொழுது, அவர்களிடம் போதிய பணம் இருப்பதினால், வீட்டைக் கட்டும் வேலையை கொண்ட்ராக்ட் கொம்பெனிகளிடம் கொடுக்கிறார்கள். கொம்பனிகளிடம் துறை சார் நிபுணத்துவம் உண்டு. அதனால் இப்பொழுது கட்டப்படும் வீடுகளில் ஓரளவுக்கு கலைநயம் காணப்படுகிறது. தமிழ் மக்களுடைய அன்றாட வாழ்வில் விவகாரங்களை ஸ்ட்ரக்சரலாக அதாவது கட்டமைப்பு சார்ந்து சிந்திக்கும் போக்குப் போதாமல் இருக்கிறது. இது தமிழ் கட்சிகளுக்குள்ளும் காணப்படுகின்றது.

இந்த அடிப்படையில் பார்த்தால், தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டத் தேவையான கட்டமைப்புக்களை எத்தனை கட்சிகள் உருவாக்கி வைத்திருக்கின்றன? குறிப்பாக எத்தனை கட்சிகளிடம் மாணவ அமைப்புகள் உண்டு? என்பிபி தென்னிலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவ அமைப்புகளுக்குள் அங்கு படிக்கும் தமிழ் மாணவர்களை இணைத்து வருகிறது. இவர்கள் தமிழ்பகுதிகளில் என்பிபிக்காக வேலை செய்து வருகிறார்கள். மாணவர்கள் போராட்டத்தின் கூர்முனை- spear head என்று பிரான்சிஸ் பனன் கூறுவார். ஆனால் அந்தக் கூர்முனை கூர் முனையை ஒடுக்கு முறைக்கு எதிராக ஒரு தவிர்க்கப்படவியலாத



போராட்ட சக்தியாக மாற்றுவதற்கு ஒரு அரசியல் இயக்கம் வேண்டும். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அவ்வாறு அரசியல் இயக்கங்களால் வழி நடத்தப்பட்ட மாணவர் போராட்டங்கள் தான் வெற்றி பெற்றிருக்கின்றன.

கட்சிகளிடம் அவ்வாறான கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில், சில புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் பல்கலைக்கழக மாணவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சங்கங்கள் போன்றவற்றை தமது நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப கையாள முற்படும் போக்கு முன்பு அதிகமாக இருந்தது. இப்பொழுதும் ஆங்காங்கே இருக்கிறது.

மாணவ கட்டமைப்புகள் மட்டுமல்ல மகளிர் கட்டமைப்புகள்' தொழில்சார் கட்டமைப்புகள் உதாரணமாக கடல் தொழிலாளர் கட்டமைப்புகள் கூட்டுறவுக் கட்டமைப்புகள் விவசாயிகள் கட்டமைப்புகள், என்று பார்த்தால் ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாகத் திரட்டத் தேவையான பல்வேறு கட்டமைப்புகளையும் தமிழ்க் கட்சிகள் கட்டியெழுப்பி இருந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு கட்டமைப்புகளை உருவாக்கவில்லை. ஏன் அதிகம் போவான்? தமது கட்சித் தொண்டர்களை அரசியல் மயப்படுத்தும் கட்டமைப்பு எந்தக் கட்சியிடம் உண்டு?

அதேசமயம் இப்பொழுது நாட்டை ஆளும் தேசிய மக்கள் சக்தியானது இடதுசாரி ஒழுக்கத்தில் வந்த ஒரு கட்சி என்ற அடிப்படையில் அவர்களிடம் அவ்வாறான கட்டமைப்புகள் உண்டு. தேசிய மக்கள் சக்திக்குள் பேராசிரியர் ரகுராம் கூறியது போல மிகச் சிலர் தான் முடிவெடுக்கும் அதிகாரத்தோடு இருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் அந்த முடிவுகள் கட்டமைப்புகளுக்கு ஊடாக மக்கள் மயப்படுத்தப்படுகின்றன.

தேசிய மக்கள் சக்தியின் கட்டமைப்புகளை முன்னுதாரணமாக கொண்டு தமிழ்க் கட்சிகள் செயல்பட வேண்டும் என்று நான் இங்கு கூற வரவில்லை. ஆனால் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் தங்களுக்கு பொருத்தமான கட்டமைப்புகளை போதிய அளவுக்கு உருவாக்கியிருக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதே எனது நோக்கம். ஆயுதப் போராட்டம் கட்டமைப்புகளை உருவாக்கியது. ஆனால் தமிழ் மிதவாத அரசியலில் குறிப்பாக கடந்த 15 ஆண்டுகளாக அவ்வாறான கட்டமைப்புக்கள் போதிய அளவுக்கு உருவாக்கப்படவில்லை.ஏனென்றால் தமிழ்த் தேசிய கட்சிகளிடம் தேச நிர்மானம் தொடர்பாகவும் தேசியவாத அரசியல் தொடர்பாகவும் பொருத்தமான, நடைமுறைச் சாத்தியமான அரசியல் தரிசனங்கள் இல்லை.

தேசியவாத அரசியல் என்பது மக்களை ஆகப்பெரிய திரளாக கூட்டிக் கட்டுவது என்ற அடிப்படையில் சிந்தித்தால்.மக்களை ஆகப் பெரிய திரளாகக் கூட்டிக் கட்டுவதற்குத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்குவது தான் தேசியவாத அரசியலாகும்.

ஆனால் கடந்த சுமார் ஐந்து ஆண்டு காலப் பகுதிக்குள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது தையிட்டியில் நடத்திவரும் போராட்டங்களைப் பார்த்தால் அது எங்கே நிற்கிறது என்று தெரியவரும். ஒவ்வொரு முழுநிலா நாளின் போதும் முன்னணி தையிட்டியில் ஒரு போராட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது. ஆனால் ஒரு கட்சியாக அதன் முக்கிஸ்தர்களில் ஒரு சிறு தொகை தான் எப்பொழுதும் அங்கே காணப்படும். அது ஒரு மக்கள் மயப்படாத, சிறுதிரள், கவனஈர்ப்புப் போராட்டம். அதை மக்கள் மயபட்டதாக மாற்றவேண்டும் என்று தரிசனம் அந்தக் கட்சியிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

அதை ஏன் மக்கள் மயப்படுத்த முடியவில்லை? அல்லது அதை எப்படி மக்கள் மையப்படுத்துவது? என்ற கேள்விகளுக்கு விடைகளைத் தேடிச் சென்றால், முன்னனணி மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்த்தேசிய அரசியலும் ஒரு புதிய தடத்தில் பிரவேசிக்கும்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. "தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

04 ஜனவரி 2025- 10 ஜனவரி 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ் வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பார்வதி சதாசிவம்

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 11 ஜனவரி 2025 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பார்வதி சதாசிவம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலிகள்



### திரு கந்தையா வைத்தியநாதன்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா வைத்தியநாதன் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 12 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கந்தையா வைத்தியநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கம்மா சதாசிவம்

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஆறாவது ஆண்டு நாள் நினைவு நாள் 09 ஜனவரி 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வசந்தா தவரத்தினம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரம்டன் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது நான்காவது ஆண்டு நாள் நினைவு நாள் 09 ஜனவரி 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீபதி ஞானாம்பிகை

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் திதி 14 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 17வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 17வது ஆண்டு நாள் நினைவு நாள் 29 ஜனவரி 2025 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



05 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி மாதங்கி செல்வராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி மாதங்கி தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்.



09 ஜனவரி 2025 வியாழக்கிழமை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




09 ஜனவரி 2025 வியாழக்கிழமை புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாகஅன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



10 ஜனவரி 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சற்குணலிங்கம் கௌரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் வினீத்தின் 20வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் வினீத் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவுவழங்கி மகிழ்ந்தார்.




11 ஜனவரி 2025 சனிக்கிழமை கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நிரனவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



12 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா வைத்தியநாதன் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




14 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிறேம்குமார் கலாஜினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிஜான் பிறேம்குமாரின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிஜான் பிறேம்குமார் தனது பெ்றறோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




14 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் ஐயப்பன் தொண்டரும் இன நல ஆர்வலருமான திரு தர்மஹீ சிவசுப்பிரமணியம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு தர்மஹீ சிவசுப்பிரமணியம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



14 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கமலராணி குணபாலசிங்கம் அவர்கள் அனைத்து இல்லக் குழந்தைகளுக்கும் கதிர்காமக் கந்தன் பேரருளும் ஆசியும் வேண்டிப் பிரார்த்திப்பதோடு பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்கின்றார்



14 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஹீபதி ஞானாம்பிகை அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



15 ஜனவரி 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலமுரளி மதிவதனி தம்பதிகளின் செல்வப்புதல்வி வருணிகா பாலமுரளியின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி வருணிகா பாலமுரளி அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## இனிய பிறந்த நன்நாள் வாழ்த்துக்கள்

## திரு தர்மஹீ சிவசுப்பிரமணியம் (ஹீ)

கனடாவில் வசிக்கும் ஐயப்பன் தொண்டரும் இனநல ஆர்வலருமான திரு தர்மஹீ சிவசுப்பிரமணியம் (ஹீ) அவர்களது பிறந்த நன்நாள் 14 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் திரு தர்மஹீ சிவசுப்பிரமணியம் அவர்கள் ஐயப்ப மகர மண்டல விரதத்தையும் பூர்த்தி செய்தார்.

தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். பிறந்த நாள் காணும் அவரை அன்புத் துணைவியார், பிள்ளைகள், உறவுகளுடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்க வளர்கவென வாழ்த்து கின்றார்கள். வாழ்க வளமுடன்!



# வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியையுமான திருமதி வேதவல்லி (முத்தையா) அரசரத்தினம் அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி!



குறையாத விளை பொருட்களும் சான்றோர்களும் குறைவற்ற செல்வமும் ஒருங்கே பொருந்தியுள்ள நாடே நாடாகும் என்றார் வள்ளுவர். இத்தகைய சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டது தான் எமது வேலணை என்னும் ஊர். வேலணையின் மேற்குப் பகுதியில் முடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் காலஞ்சென்ற முத்தையா சிவபாக்கியம் தம்பதியினருக்கு இரண்டாவது மகளாக 1942ம் ஆண்டு பங்குனி மாதம் 20ம் திகதி பிறந்தார் முத்தையா ரீச்சர் என்று அன்பாக அழைக்கப்பட்ட திருமதி வேதவல்லி அரசரத்தினம் அவர்கள்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை வேலணை சைவப்பிரகாச வித்தியா சாலையிலும் உயர்கல்வியை வேலணை மத்திய கல்லூரியிலும் பயின்று 1961இல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி புவியியல் வரலாறு தமிழ் ஆகிய பாடங்கள் பயின்று 1964 இல் கலைமாணிப் பட்டம் பெற்றுப் பிறந்த மண்ணுக்கும் கல்வி கற்ற பாடசாலைக்கும் பெருமை சேர்த்தார்.

1966இல் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து அங்கு ஐந்து ஆண்டுகள் கடமையாற்றிய பின்னர் 1971இல் தான் கல்விகற்ற வேலணை மத்திய கல்லூரி யில் ஆசிரியப் பணியை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார். கல்வியிலும் இறை பக்தியிலும் சிறந்து விளங்கிய இவர் புளியங்கூடலைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னம்பலம் இராசம்மா தம்பதியினரின் மகனான திரு அரசரத்தினம் அவர்களை மணந்து இல்லற வாழ்வின் பயனாக காயத்திரி காலஞ்சென்ற சிறிவத்சன் ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்றுத் தனது வாழ்க்கைப் பயணத்தில் 2000ஆம் ஆண்டில் தனது விருப்பமான ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்று வாழ்ந்து வந்தவேளை இயற்கையின் நியதியால் 14-1-2025 அன்று தனது 82வது வயதில் சிவபதி அடைந்துள்ளார்.

இவரது மூத்த சகோதரி திருமதி திலகவதி மகாலிங்கம் இளைய சகோதரர் கந்தசாமி (மன்னாதி). சிறு வயதிலேயே தாயார் இறந்தமையால் சிற்பனை யிலுள்ள இவரது தந்தையாரது சகோதரி காலஞ்சென்ற திருமதி தர்மலிங்கம் செல்லம்மா அவர்களது வீட்டில் வளர்ந்தார்.

தர்மம்மான் என்று அன்பாக அழைக்கப் பட்ட உயர்திரு தர்மலிங்கம் அவர்கள் வேலணையின் பெருமகனாகத் திகழ்ந்தவர். வேலணைக் கிராமசபையின் ஆறாம் வட்டார அங்கத்தவராச் சேவையாற்றிய பெருமைக்குரியவர் மட்டுமல்ல சங்கத்தார் கேணி ஆதிவைரவர் கோயிலின் தர்மகர்த்தாவாகவும் ஆன்மீகப் பணி புரிந்தவர். அன்னாரைத் தங்கள் பிள்ளை போலவே சிறப்புற வளர்த்துக் கல்வியறிவு ஊட்டிய பெருமை திரு திருமதி தர்மலிங்கம் செல்லம்மா தம்பதியினரையே சாரும் என்றால் அது மிகையல்ல.

திருமதி வேதவல்லி அரசரத்தினம் அவர்களும் தனது மாமனாரது சமூகப் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார். ஆதிவைரவர் கோயில் சித்திரைக் கஞ்சி வைகாசிப் பொங்கல் திருவிழா நாட்களில் பேராதனையிலிருந்து வீட்டுக்கு வந்து நிகழ்வுகளை நிாவகிப்பார். இந்த அனுபவங்களின் காரணமாக தர்மலிங்கம் அவர்களது காலத்திற்குப் பின்னர் கோயிலை நிர்வகித்த அங்கத்தவர் உயர்திரு முத்துத்தம்பி குலசேகரம்பிள்ள அவர்கள் கனடா செல்ல கோயில் நிர்வாகப் பொறுப்பை இவரே ஏற்று அயலவரின் உதவியுடன் ஆலய வளர்ச்சிக்கு அரும் பணியாற்றினார்.

1979 முதல் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வித்தகமைக் கற்கை நெறியைப் பயின்ற காலம் தவிர்த்து 1971 முதல் ஓய்வு பெற்ற 2000ஆம் ஆண்டு வரை சுமார் 29 ஆண்டுகள் வேலணை மத்திய கல்லூரியில் உயர்தர மாணவர்களுக்குப் புவியியல் தமிழ் போன்ற பாடங்களைக் கற்பித்து மாணவர்கள் மத்தியிலும் அதிபர் ஆசிரியர் மட்டத்திலும் நன் மதிப்பைப் பெற்றார். ஆசிரியர்களுக்கு முக்கியமாக இருக்க வேண்டிய அன்பு பாசம் பரிவு நட்புணர்வு ஆகிய நற்பண்புகள் மூலம் மாணவர்களிடத்தில் கல்வி பணிவு ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு என்பவற்றை வளர்த்தெடுக்கலாம் என்பதைத் தனக்கேயுரிய சிறப்பான அணுகுமுறை மூலம் நிரூபித்துக் காட்டிய பெருமை இவருக்குரியது. ஆசிரியப் பணியில் தாய்மைப் பண்பினையும் கலந்து ஒவ்வொரு பிள்ளையையும் தன் பிள்ளை போல் நேசித்துக் கற்பிக்கும் பாங்கிற்கு திருமதி வேதவல்லி அரசரத்தினம் அவர்கள் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. இதன் காரணமாகவே 2014 இல் கொழும்பில் இயங்கும் வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினரால் கௌரவிக்கப் பட்டமை இங்கு நினைவு கூரத்தக்கது.

எமது கல்லூரி வளாகத்தில் எழுந்தருளி இருக்கும் சிவகாமி சமேத நடராசப் பெருமான் ஆலயத் திருப் பணி முற்றுப் பெறுவதற்கு ஆசிரியையின் பங்கு அளப் பெரியது. 1999இல் நடைபெற்ற கல்லூரியின் பொன்விழாக் குழுவிலும் அதிபர் திரு கு. கணேசலிங்கம் அவர்களுடன் இணைந்து செயலாற்றியதுடன் விழாவில் நன்றியுரை ஆற்றிய பெருமையும் இவருக்குண்டு என்பது குறிப்பிடத் தக்கது.

அடியேன் இவரிடம் படிக்காத போதும் அயலவர் என்ற முறையிலும் இடப் பெயர்விற்குப் பின்னரான காலத்தில் எமது கல்லூரி நிர்வாகம் மற்றும் பொருளாதாரத் தேவை சார்பான விடயங்களில் 1997 முதல் தொலைபேசி மூலமும் கடிதங்கள் ஊடாகவும் தொடர்பைப் பேணியதுடன் ஆலோசனைகளையும் பெற்று வந்துள்ளமை ஆண்டவன் கிருபையே என்று சொல்வதே பொருத்தமானதாகும்



ஆசிரியப் பணி வெறுமனே கற்பித்தல் செயன்முறை என்பதற்கும் அப்பால் அது ஓர் உன்னதமான வாண்மைப் பணி என்பதை உணர்ந்து அவ்வாறே வாழ்ந்து காட்டிய எமது மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய மூத்த ஆசிரியை திருமதி வேதவல்லி அரசரத்தினம் அவர்களது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர் உற்றார் உறவினர் நண்பர்கள் பழைய மாணவர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது கல்லூரி வளாகத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி சமேத நடராஜப் பெருமானை வேண்டுகிறேன்.

**சி. இளஞ்செழியன்**
**பழைய மாணவர் (1975 - 1982)**
**வேலணை மத்திய கல்லூரி**







# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06
03
1940

மறைவு
13
01
2020

## காலஞ்சென்ற அமரர் சி.வி.விவேகானந்தன்

(C.V. Vivekananthan)

**சிரேஷ்ட சட்டத்தரணி**

**யாழ். மிருசுவில் விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி நுணாவில் கிழக்கை வதிவிடமாகவும், கொழும்பை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்டிருந்த காலம் சென்ற அமரர் சி.வி.விவேகானந்தன் [சிரேஷ்ட சட்டத்தரணி] அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி. உங்கள் வாழ்வின் ஆளுமையை நெகிழ்ச்சியுடன் நினைவுகூர்கிறோம்.**

"பப்பா,"
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்று ஐந்து ஆண்டுகள் கடந்த போதும்,
உங்கள் நினைவுகள் எங்கள் உள்ளங்களில் பசுமரத்தாணி போல் ஆழமாகப் பதிந்துபோயிருக்கின்றது.
நேர்மைமிகும் உங்களின் வாழ்க்கைப் பயணம் எங்களுக்கு இன்றும், என்றும் வழிகாட்டுதலாக விளங்குகின்றது.
குடும்பத்திற்கும், சட்டத்துறைக்கும், சமூகத்திற்கும் நீங்கள் அளித்த பங்களிப்புகள் என்றும் மறக்கமுடியாதவை.
சட்டத்துறை உங்கள் உயிர் மூச்சு. அரைநூற்றாண்டு காலம் உங்கள் துறையில் நீங்கள் சாதித்தவை
ஒரு போற்றதக்க வரலாறு.

இனக்கலவரம், உள்நாட்டுப் போர் போன்ற பாரிய தாக்கங்கள் எங்களை உலுக்கிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்
சூழ்நிலைகளின் தாக்கம் எங்களை பாதிக்காதவாறு எங்களை வழி நடத்தியவர் நீங்கள்.
உங்களின் வழிகாட்டும் திறன், வார்த்தைகள், ஆதரவு, தேவைகள் அறிந்து உதவிகள் செய்யும் பண்பு,
உறவுகளை உபசரித்த முறைகள் உங்களின் வாழ்வியலிருந்து
எங்களுக்கு கிடைத்து நாம் பின் பற்றும் அரிய பண்புகள்.

**உங்கள் நினைவுகள் என்றும் எம் மனதில் இருந்து நீங்காது.**
**உங்கள் நினைவுகளுடன்**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

இந்தத் தைப்பொங்கலில் உங்களுக்கும்
உங்கள் குடும்பத்தினருக்கும்
மகிழ்ச்சியும் செழிப்பும் பொங்கட்டும்!
இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

May the blessings of Thai Pongal
Bring you and your family
Good health and happiness

Happy Thai Pongal!





Member of Parliament | Scarborough North

SHAUN CHEN

4386 Sheppard Avenue East, Unit E
Scarborough, Ontario M1S 1T8

416-321-CHEN (2436)
info@shaunchen.com

ShaunChenMP @shaunchenmp @Shaun_Chen www.shaunchen.com

# கிளீன் ஸ்ரீலங்கா:- வலி நிவாரணி அரசியல்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



சிறீலங்காவை கிளீன் பண்ணத்தான் வேண்டும். ஆனால் அதை எங்கிருந்து தொடங்குவது? சிறீலங்காவின் கறை எது? அல்லது அசுத்தம் எது? என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். அங்கிருந்து தான் சுத்தப்படுத்தலைத் தொடங்கலாம். சிறீலங்காவின் அசுத்தம் எது?

இனப்பிரச்சினை தான். இன மோதல்கள் தான் சிறீலங்காவை உலக அரங்கில் அவமானப்படுத்தின. இனப்பிரச்சினை தான் சிறீலங்காவை ஜெனிவாவில் கொண்டு போய் நிறுத்தியிருக்கிறது. இனப்பிரச்சினை தான் தமிழ் மக்களை கூடு கலைந்த பறவைகள் ஆக்கியது. இனப்பிரச்சினை தான் சிறீலங்காவுக்குள் வெளிச் சக்திகள் தலையிடும் வாய்ப்பை வழங்கியது. இனப்பிரச்சினை தான்

நாட்டைப் பொருளாதார ரீதியாக நாசமாக்கியது.கடன் வாங்கிச் சண்டை செய்தார்கள். கடனுக்கு வெடிமருந்து வாங்கி தமது சக இனத்தவர்களைக் கொன்றார்கள். காசைக் கரியாக்கினார்கள். விளைவாக நாடு அதன் முதலீட்டுக் கவர்ச்சியை இழந்தது.எந்த நாட்டை சிங்கள மக்களுக்கு வென்று கொடுத்தார்களோ, அந்த நாட்டிலிருந்து இப்பொழுது சிங்கள மக்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டில் மட்டும் மொத்தம் மூன்று லட்சத்திற்கும் அதிகமானவர்கள் வெளியேறியிருக்கிறார்கள்.

முன்பு யுத்த காலங்களில் தமிழர்கள் வெளியேறினார்கள். காரணம் உயிர்ப் பயம். இப்பொழுது சிங்கள மக்களும் வெளியேறுகிறார்கள். இப்பொழுது வெளியேறும் அதிகமானவர்கள் படித்தவர்கள், துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்கள். பெரிய பொறுப்புகளில் இருந்தவர்கள். நடுத்தர வயதுக்காரர்கள்... ஏன் வெளியேறுகிறார்கள்? யாருக்காக நாட்டை வென்று கொடுத்தார்களோ, அவர்களே வெளியேறுகிறார்கள். என்றால் அந்த வெற்றியின் பொருள் என்ன? வென்றெடுத்த நாடு யாருக்குச் சொந்தம்?

அது இப்பொழுது பேரரசுகளுக்குச் சொந்தமாகி வருகிறது. எல்லாப் பேரரசுகளின் இழு விசைகளுக்குள்ளும் நாடு சிக்கி விட்டது.பொருளாதார நெருக்கடியின் விளைவாக அது கடன் வாங்கிய நாடுகள் மற்றும் உலகப் பொது நிதி நிறுவனங்களின் பிடிக்குள்ளும் வந்து கொண்டிருக்கிறது.

அண்மையில் அரசாங்கம் நிலையான வைப்புக்களுக்கான வட்டிக்கு விதிக்கப்படும் வரியை உயர்த்தியிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க அந்த வரியை ஐந்து விகிதமாக உயர்த்தினார்.அனுர அதனை பத்து விகிதமாக உயர்த்தியிருக்கிறார். அரசாங்கம் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு கீழ்படிவதாக விமர்சிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும் இருபது லட்ஷத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வந்தார்கள். அதேசமயம் மூன்று லட்ஷத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள்.

போர் காரணமாக தமிழர்கள் அப்பொழுதோ புலம்பெயரத் தொடங்கி விட்டார்கள். பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், மீண்டும் தமிழ்ப் புலம்பெயர்ச்சி அதிகரித்திருக்கிறது. இது மூன்றாவது தமிழ்ப் புலப்பெயர்ச்சி அலை. இந்த அலை முன்னைய இரண்டு புலப் பெயர்ச்சி அலைகளில் இருந்தும் துலக்கமான விதங்களில் வேறுபடுகிறது.

முதலாவது புலப்பெயர்ச்சி அலையானது 1983யூ லைக்கு முந்தியது. அதில் ஆங்கிலம் பேசும் படித்த, பெருமளவுக்கு உயர் குழாத்துத் தமிழர்கள் புலம் பெயர்ந்தார்கள். அவர்கள் சட்ட விரோதமாக புலம்பெயர்ந்தது குறைவு. இரண்டாவது அலை 1983இற்குப் பின்னரானது. அதில் லட்சக்கணக்கானவர்கள் புலம் பெயர்ந்தார்கள். அவர்களில் அதிகமானவர்கள் சட்ட விரோதமாகப் புலம் பெயர்ந்தார்கள். சட்டவிரோத வழிகளின் ஊடாகப் புகலிடந் தேடிச் சென்றவர்கள்.

இப்பொழுது நிகழும் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையும் ஒப்பீட்டளவில் சட்ட ரீதியானது. ஏனென்றால் ஏற்கனவே புலம் பெயர்ந்தவர்கள் அந்தந்த நாடுகளில் செற்றில்ட் ஆகிவிட்டார்கள். அவர்கள் ஊரில் உள்ள தங்கள் உறவுகளுக்கு ஹஸ்பொன்சர்ஹ செய்யக்கூடிய அல்லது விசா வாங்கிக் கொடுக்கக் கூடிய தகைமையை அடைந்து விட்டார்கள். இது மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் ஒரு பிரதான வேறுபாடு. அடுத்தது, இப்பொழுது புலம்பெயரும் தமிழர்களில் அநேகர் படித்தவர்கள். நடுத்தர வயதினரும்




உண்டு. இங்கு பொறுப்பான பதவிகளில் இருந்தவர்கள், அரசு ஊழியர்கள், சமூகத்தின் துறைசார் தலைமைத்துவம் என்று வர்ணிக்கத்தக்கவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதில் ஒரு பகுதியினர் திரும்பி

வருகிறார்கள். தாயகத்தில் தமது பதவி நிலை காரணமாக அனுபவித்த அதேயளவு மரியாதை புலம் பெயர்ந்த நாட்டிலும் கிடைக்காதபோது விரக்தியடைகிறார்கள். குறிப்பாக நடுத்தர வயது கடந்தவர்கள் புலம் பெயர்ந்த நாட்டின் நிலைமைகளோடு தங்களைச் சுதாகரிக்க முடியாதபோது திரும்பி வருகிறார்கள். இதுவும் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் பிரதான வேறுபாடுகளில் ஒன்று.

அண்மையில்,ஐரோப்பாவில் வசிக்கும் ஒரு பிரபல எழுத்தாளர் என்னைக் காண்பதற்கு வந்திருந்தார். அவரோடு ஓர் இளம் அரச ஊழியரும் வந்திருந்தார். அந்த அரச ஊழியர் சொன்னார், தான் புலம் பெயரப் போவதாக. ஏனென்று கேட்டேன். ஒரு அரசு ஊழியனாக என்னால் தாக்குப் பிடிக்க முடியாதுள்ளது. ஒரு புதிய வீட்டைக் கட்டினேன். மூன்று மில்லியன்களுக்கும் மேல் கடன்.அந்த கடனை அடைப்பதற்காக என்னுடைய சம்பளத்திலிருந்து பெரும் தொகுதி போகிறது. ஜீவனோபாயத்துக்காக அப்பாவும் அம்மாவும் வீட்டில் ஒரு கடை திறந்து வைத்திருக்கிறார்கள். அந்த கடையைத் திறப்பதற்கான முதலீட்டில் ஒரு பகுதியையும் புலம் பெயர்ந்த நண்பர்கள் தான் தந்தார்கள். புலம் பெயர்ந்த தமிழர்களின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் என்னுடைய கடன் ஒரு சிறிய தொகை. ஆனால் அரச ஊழியனாகிய எனக்கோ அது பெரிய தொகை.எனவே கடனாளியாக இருப்பதை விடவும் புலம்பெயரலாம் என்று முடிவெடுத்தேன் என்று சொன்னார்.

அவரோடு வந்த எழுத்தாளர் சொன்னார் அவர் சொல்வது உண்மை. ஏனென்றால் என்னுடைய கிராமத்துக்கு அண்மையில் ஒரு சா வீட்டுக்குப் போயிருந்தேன். என்னுடைய வயதில் உள்ளவர்கள் அங்கே வந்திருந்தார்கள். பெரும்பாலானவர்கள் தோற்றத்தில் கிழண்டிப் போய்க் காணப்பட்டார்கள். அவர்களுடைய வயதை விட அதிகம் முதுமையான தோற்றம். ஏனென்றால் வாழ்க்கை அந்தளவுக்குக் கஷ்டமாக இருக்கிறது. சுமையாக இருக்கிறது என்று. இவ்வாறு மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் கீழ் எத்தனை தமிழர்கள் புலம் பெயர்ந்து விட்டார்கள் என்பது தொடர்பாக சரியான புள்ளி விபரம் யாரிடமாவது உண்டா?

இப்படியாக போரில் வென்றவர்களும் புலம் பெயர்கிறார்கள் தோற்றவர்களும் புலம் பெயர்கிறார்கள். இப்பொழுது வெற்றிக்கும் பொருள் இல்லை. தோல்விக்கும் பொருள் இல்லை. இந்த லட்சணத்தில் நாட்டைச் சுத்தப்படுத்துகிறேன் என்று புறப்பட்டு வேண்டுமானால், வீதிகளைச் சுத்தப்படுத்தலாம். சுற்றுச் சூழலைச் சுத்தப்படுத்தலாம். அதற்கும் வரையறைகள் உண்டு. ஏனென்றால் சுற்றுச் சூழலும் அரசியல் தான்.

ஒப்பீட்டளவில் ஓரளவுக்காவது சுத்தப்படுத்தக்கூடிய துறை அது தான். அது தவிர ஏனைய எந்தத் துறையிலும் நாட்டைச் சுத்தப்படுத்த முடியுமா?




முடியாது. ஏனென்றால் ஊழல், முறைகேடு, அதிகார துஷ்பிரயோகம் போன்றன ஒரு பண்பாடாக வளர்ந்து விட்டன. எங்கிருந்து அவை பண்பாடாக மாறின? எல்லாப் பிரச்சினைகளையும் இனப்பிரச்சினை மூலம் திசை திருப்பலாம் என்ற அரசியல் சூழல் தான் காரணம். எல்லாத் தவறுகளையும் இனமுரண்பாட்டைத் தூண்டுவதன் மூலம் கடந்து விடலாம் என்ற ஒரு அரசியல் சூழல் தான் காரணம்.

தமிழ்ப் பகுதிகளில் அரச திணைக்களங்களில் காணப்படும் விமர்சனத்துக்குரிய பெரும்பாலான அம்சங்கள் தொடர்பாக அதிகாரிகளைக் கேட்டால், அரசாங்கம் விடுவதில்லை அல்லது மேலதிகாரிகள் இனரீதியாக விவகாரத்தை அணுகுவார்கள் என்றெல்லாம் சாட்டுச் சொல்லுவார்கள். நாங்கள் எதையாவது செய்தால் அதனை இனரீதியாக வியாக்கியானப்படுத்தி எங்களைப் பதவி இறக்கி விடுவார்கள். அல்லது நமது பதவி உயர்வுகளை நிறுத்தி விடுவார்கள் என்று கூறுவார்கள்.

இப்படியே இரண்டு இனங்கள் மத்தியிலும் காணப்படுகின்ற எல்லா முறைகேடுகளுக்கு இன முரண்பாட்டை ஒரு சாட்டாகச் சொல்லும் பண்பாடு வளர்ந்து விட்டது. ஏன் அதிகம் போவான்? ராஜபக்ச குடும்பத்தில் பசில் ஒரு புரோக்கராக, ஒரு டீல் மேக்கராக எப்படி எழுச்சி பெற்றார்? யுத்த வெற்றி தான் காரணம். யுத்தத்தில் வென்றவர்கள் நாட்டைத் தனிப்பட்ட சொத்தாக மாற்றினார்கள். நாட்டின் கருவுலத்தைத் திருடினார்கள். வெற்றி மயக்கத்தில் குருடாக இருந்த சிங்கள மக்களுக்கு அது முதலில் தெரியவில்லை. அது தெரிந்த பொழுது, நாடு மீள முடியாதபடி பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கி விட்டது.

இப்பொழுது அனுர வந்திருக்கிறார். இன முரண்பாடுகள் இல்லை என்று சொல்லுகிறார். அது தவறு. இன முரண்பாடுகள் எப்படி இல்லாமல் போயின? தமிழ்ப் பகுதிகளில் அவருடைய வேட்பாளர்களுக்குக் கிடைத்த வெற்றியை வைத்து அவ்வாறு கூறமுடியாது. இனமுரண்பாடு எங்கிருந்து தோன்றியது ?தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக தேசமாக ஏற்றுக் கொண்டு பல்லினத்தன்மை மிக்க ஒரு நாட்டைக் கட்டியெழுப்பத் தயாரில்லை என்பது தான் இன முரண்பாட்டின் வேர். எனவே இனமுரண்பாட்டைத் தீர்ப்பது என்பது நாட்டின் பல்லினத்தன்மையை ஏற்றுக் கொள்ளும் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களைச் செய்வது தான். ஆனால் அதைச் செய்வதற்கு அனுர தயார் இல்லை. அனுரவின் இடத்தில் யார் இருந்தாலும் அதைச் செய்ய மாட்டார்கள். ஏனென்றால் இனப்பிரச்சினை தான் நாட்டைக் கடனாளியாக்கியது என்ற விடயத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு காரணம், ஊழலும் முறைகேடும் என்றுதான் அவர்களிற் பலர் கூறி வருகிறார்கள். சிங்களப் (19ம் பக்கம் பார்க்க)

# பிடியை இறுக்கும் வெளிவிவகார அமைச்சு

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



அமைச்சர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் தொடர்பாடலை வைத்துக் கொள்வதற்கான வரையறைகளை அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் விதிமுறைகள் தொடர்பாக, ஜனாதிபதி செயலகத்தினால் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண ஆளுநர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

இது அரசாங்க அதிகாரிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் தூதரக பிரதிநிதிகளுடன், தன்னிச்சையான தொடர்புகளை வைத்திருப்பதை தடை செய்யும் நோக்கம் கொண்டது. அரசாங்கத்துக்கும் வெளிவிவகார அமைச்சுக்கும் தெரியாமல், எந்தவொரு அரசாங்க அதிகாரியும், வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதை தடுக்கும் நோக்கில், இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருப்பது தெளிவாக தெரிகிறது. அத்துடன், அரசாங்க அதிகாரிகளின் வெளிநாட்டுப் பயணங்களை கட்டுப்படுத்துகின்ற நோக்கம் உள்ளதையும், புரிந்து கொள்ள முடிகிறது.

இலங்கையில் வெளிநாட்டு தலையீடுகள் இருப்பது தொடர்பாக பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டு வந்திருக்கின்றன. குறிப்பாக அமெரிக்கா, இந்தியா, சீனா, மேற்குலகம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பல்வேறு தரப்புகளால் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. முடிவுகளை எடுப்பதற்கு அழுத்தங்களை கொடுப்பது தொடக்கம், தேர்தல் முடிவுகளை தீர்மானிப்பது வரைக்கும், அழுத்தங்கள் இருப்பதாக கூறப்பட்டு வந்திருக்கிறது.

இவ்வாறு காலத்துக்கு காலம் குற்றச்சாட்டுகளை முன் வைத்து வந்த ஒரு கட்சி ஜே.வி.பி. அதனை பிரதானமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி இப்போது ஆட்சிக்கு வந்துள்ள சூழலில், வெளிநாட்டு இராஜதந்திரிகள் உள்நாட்டு நிர்வாகத்திலோ அல்லது செயல்முறைகளிலோ தலையீடுகளை செய்ய முடியாத ஒரு தடுப்பரணை உருவாக்க முயன்றிருக்கிறது அரசாங்கம்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த குறுகிய காலத்திலேயே இது தொடர்பான வரையறைகளை நிபந்தனைகளை வெளியிட்டிருப்பது முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம்.

`இது வரை காலமும், இலங்கைக்கு பயணம் மேற் கொள்ளும் வெளிநாட்டு இராஜதந்திர குழுவினர் உள்நாட்டில் உள்ள தமது தூதுவர் அல்லது தூதரக தலைமை பிரதிநிதியின் ஊடாக, அமைச்சர்கள், பிரமுகர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளை சந்திப்பதற்கான நேர ஒழுங்குகளை செய்து வந்தனர்.

இது இராஜதந்திர நடைமுறைகளுக்கு முரணானது எனக் கூறி அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. அதற்குப் பதிலாக வெளிவிவகார அமைச்சின் இணைப்பு பிரிவுடன் தொடர்பு கொண்டு அவர்கள் ஊடாகவே சந்திப்புகளுக்கான நேர ஒழுங்குகளை தீர்மானிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இது வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் உள்நாட்டு பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்களுக்கும் இடையில் எந்த இரகசிய சந்திப்பும் நடக்காமல் இருப்பதை உறுதி செய்யும் நோக்கம் கொண்டது. அரசாங்கத்துக்கு தெரியாமல், எந்த ஒரு வெளிநாட்டு பிரதிநிதியும், இங்குள்ள அமைச்சரையோ




அதிகாரிகளையோ பிரமுகர்களையோ சந்திக்க முடியாத சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

மாகாண நிர்வாகங்களுடன், பல்வேறு நாடுகளின் தூதுவர்கள் இராஜதந்திரிகள் சந்திப்புகளை நடத்தி வருகிறார்கள். அவற்றின் போது உள்ளூர் பிரச்சினைகளை அறிந்து கொண்டு அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பப்படுகின்ற சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. இவற்றினால் ஏற்படுகின்ற சங்கடங்களை கருத்தில் கொண்டு அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. இதன் மூலம் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க நிர்வாக கட்டமைப்புகளில் உள்ள அதிகாரிகளால், வெளிநாட்டு இராஜதந்திரிகளின் சந்திப்புக்களை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்படும்.

வெளிவிவகார அமைச்சினூடாக இவ்வாறான சந்திப்புகள் ஒழுங்குபடுத்தப்படும் போது, என்னென்ன விடயங்கள் பேசப்படலாம், எவ்வாறு பேசப்பட வேண்டும் என்ற ஒரு நெறிமுறை ஆலோசனை அவர்களுக்கு வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

அது மாத்திரமல்ல, இவ்வாறான சந்திப்புகளின் போது வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவரும் உடன் இருக்கப் போகிறார். அதே போன்று, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களை வெளிநாட்டு இராஜதந்திரிகள் சந்திப்பதற்கான ஒழுங்குகளை முன்னெடுப்பது குறித்தும், புதிய நிபந்தனைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதன்படி, ஜனாதிபதி அல்லது பிரதமரை ஐ.நா அல்லது வெளிநாட்டு தூதரகங்களின் கீழ்மட்ட அதிகாரிகளால் சந்திக்க முடியாது. அவ்வாறான சந்திப்புக்கு ஒழுங்குபடுத்தக் கூடாது என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தூதுவர் நிலையில் உள்ளவர்களுக்கு மாத்திரம், இவ்வாறான சந்திப்பு ஒழுங்குகள் ஏற்படுத்திக் கொள்ளப்படும். இது வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் அரசாங்கத் தலைவர்கள் ஓர் இடைவெளியை பேண விரும்புகிறார்கள் என்பதை காட்டுகிறது.

இளநிலை அதிகாரிகளால் சிக்கலான நிலையை எதிர்கொள்வதை உயர்மட்ட தலைவர்கள் விரும்பவில்லை. அவர்களை பாதுகாக்கும் நோக்கில் இவ்வாறான ஒரு விதிமுறை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் அரசாங்கம் எளிமையான அரசாங்கம் என்றும் ஜனாதிபதியும் பிரதமரும் எல்லோராலும் இலகுவாக தொடர்பு கொள்ளக்கூடியவர்கள் என்றும் கூறப்பட்டுக் கொள்ளுகின்ற சூழலில், வெளிநாட்டு இராஜதந்திரிகளை வகைப்படுத்தி சந்திப்புக்கு அனுமதிப்பது என்பது அந்த எளிமை நிலையை கேள்விக்கு உட்படுத்துவதாக இருக்கிறது. ஆயினும் அரசாங்க நடைமுறைகளின் படி, முக்கிய தலைவர்களை சந்திப்பதற்கான சில நெறிமுறைகள் இருக்கின்றன. அந்த நெறிமுறைகள் சில வேளைகளில் இறுக்கமாக கடைபிடிக்கப்படும். சில வேளைகளில் நெகிழ்வாக பின்பற்றப்படும். சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப நெகிழ்வான விடயங்கள் கூட இறுக்கமாக கையாளப்படும். அது நாடுகளுக்கு இடையிலான உறவுகளை பொறுத்த விடயமாக இருக்கும்.

அது மாத்திரமன்றி, வெளிவிவகார அமைச்சின் உத்தியோகபூர்வ எழுத்துபூர்வ அனுமதியின்றி வெளிவிவகாரக் கொள்கை மற்றும் வெளிநாட்டு உறவுகள் மற்றும் வெளிநாடுகள் தொடர்பான விடயங்கள் தொடர்பாக எந்தவொரு ஊடக அறிக்கையையும் வெளியிடக் கூடாது என்றும் அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

அனைத்து மாகாண சபைகளும், `உள்ளூராட்சி நிறுவனங்களும் வெளிவிவகார அமைச்சின் அனுமதியின்றி இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வெளிநாட்டுப் பணிகளில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து நிதியுதவியை பெற்றுக் கொள்வதற்கும், இரண்டு நகரங்களுக்கு இடையில் சகோதரத்துவ உடன்பாடுகள் செய்யத் கொள்ளப்படுவதை கட்டுப்படுத்துவதற்கும் இவ்வாறான தடை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது .

நிதி அல்லது பாதுகாப்பு போன்ற அமைச்சுக்கள், கடன்கள் அல்லது தொழில்நுட்ப விடயங்கள் போன்ற குறிப்பிட்ட விடயங்களில் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள போதும், வெளியுறவு அமைச்சுடன் கலந்தாலோசித்த பின்னரே அதனை செய்ய முடியும் என்றும் புதிய நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க அதிகாரிகள், அமைச்சர்களின் அனைத்து வெளிநாட்டு பயணங்களுக்கும் ஜனாதிபதியிடம், முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தூதரகங்களுடனான எந்தவொரு முறைசாரா கடிதப் பரிமாற்றம் குறித்தும் வெளிவிவகார அமைச்சுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இராஜதந்திர உறவுகளோ அங்கீகாரமோ இல்லாத நாடுகளின் பிரதிநிதிகள் நடத்தும் நிகழ்வுகளில் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்து கொள்ளக் கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இருதரப்பு, பிராந்திய அல்லது பலதரப்பு ஒப்பந்தங்கள் அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகியவற்றிற்கான கலந்துரையாடல்களை தொடங்குவதற்கு முன்னரே அமைச்சுக்கள் முன்கூட்டியே வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அது மாத்திரமன்றி, வெளிநாடுகளின் தேசிய தின கொண்டாட்டங்களில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அமைச்சரவை ஒவ்வொரு மாதமும் ஒரு அமைச்சரை நியமிக்கவுள்ளது.

இது எந்த ஒரு நாட்டுடனும் தொடர்ச்சியாக அமைச்சர்கள் அதிகாரிகள் தொடர்புகளை வைத்துக் கொள்ள முடியாத வகையில் தடுப்பதற்கும், எல்லா அமைச்சர்களுக்கும் சம சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள முடிவாக சொல்லப்படுகிறது. இந்த நிபந்தனைகளும் வரைமுறைகளும், வெளிநாடுகளுடனான உறவுகளையும் அந்த நாடுகளின் இலங்கைத் தொடர்புகளையும் முழுமையான கண்காணிப்பில் வைத்துக் கொள்ளும் நோக்கத்தை கொண்டவை. இது இலங்கையின் வெளிவிவகார– கொள்கை, இறுக்கமானதொரு நிலைக்குள் பிரவேசிக்கத் தொடங்கி இருக்கிறதா என்ற கேள்வியையே எழுப்புகிறது.



# எந்தப் பெறுமானமும் இல்லாத தமிழரசு!

தமிழ்த்தேசியக் கட்சிகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே மக்களிடத்தில் பேராதரவு உண்டு. அதனால் தான் அது ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பின்னுக்குத் தள்ளி விட்டு வெற்றியைப் பெற்றிருக்கிறது. தமிழரசுக் கட்சிக்கு மக்களிடம் செல்வாக்கிருப்பதால் தான், அதனோடு இணைந்து கொள்வதற்கு ஏனைய கட்சிகள் ஆர்வம் காட்டுகின்றன' என்ற கருத்து அல்லது அவ்வாறான அபிப்பிராயம் சிலரிடத்திலே காணப்படுகிறது. அல்லது அவ்வாறான ஒரு கருத்துருவாக்கத்தைச் செய்வதற்குச் சிலர் முயற்சிக்கிறார்கள். இந்தப் பெருமிதம் தமிழரசுக் கட்சிக்கும் உண்டு. அந்தப் பெருமிதத்திலேயே அது குளிர் காய்கிறது. இதை வளர்த்துத் தன்னை அது நிலைப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது.

இப்படிச் சொல்லப்படுவதைப் போல அல்லது இவ்வாறு கருதுவதைப் போல தமிழரசுக் கட்சிக்கு மக்களிடத்திலே உண்மையாகவே செல்வாக்குண்டா?

இல்லை. நிச்சயமாக இல்லை. அப்படிச் செல்வாக்கைப் பெறுவதற்கு அது தன்னுடைய அரசியல் வரலாற்றில் எந்தப் பெறுமானங்களையும் உருவாக்கவில்லை. அதிலும் 1970க்குப் பிறகு, தமிழரசுக் கட்சிக்கு அரசியலே இருக்கவில்லை. அது தன்னுடைய நிறைவேறாத கனவுடன் 1970களில் மரித்தது. ஆனால், அது போட்ட விதையை தமிழரசுக் கனவை தனிநாட்டுக்கான அபிலாஷையை மக்களும் இளைய தலைமுறையினரும் தொடர்ந்தனர். அதற்காக அவர்கள் மிகப் பெரிய விலைகளைக் கொடுத்தனர். தமிழரசுக் கட்சி அதில் சிறிய அளவுக்குக் கூடப் பங்களிப்புச் செய்யவில்லை.

2004 இல் விடுதலைப்புலிகள் இயக்கம், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்காக தமிழரசுக் கட்சியின் சின்னத்தைப் பயன்படுத்தத் தொடங்கிய பிறகே, அது மீளுயிர்ப்படைந்தது. அது கூட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீரசிங்கம் ஆனந்தசங்கரியின் உணர்ச்சி வசப்பட்ட அவசர அரசியல் முடிவுகளால் தான் வாய்த்தது.

புலிகளுக்கும் ஆனந்தசங்கரிக்கும் இடையில் உருவான முரண்பாடுகளால் தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்தைப் பயன்படுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. இல்லையென்றால், அப்போது தமிழரசுக் கட்சி வரலாற்றில் மறைந்தே போயிருக்கும். ஏனென்றால், தன்னை மீளுயிர்ப்புச் செய்யக் கூடிய அரசியற் திறனோ, சிந்தனைப் பலமோ, அர்ப்பணிப்பு அணியோ, கட்டமைப்பு விருத்தியோ 1970க்குப் பின், தமிழரசுக் கட்சிக்கு இருக்கவில்லை. அது தமிழர் விடுதலைக் கூட்டணியில் கரைந்து போயிருந்தது.

ஆனால் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் நிலை அப்படியல்ல. அது தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஐக்கியமாகியிருந்தாலும் கூடிய விரைவில் அதிலிருந்து விலகித் தன்னை நிலை நிறுத்த முயற்சித்தது. குமார் பொன்னம்பலம் அதனுடைய அடையாளமாக இருந்தார். அப்படித் தமிழரசுக் கட்சி எந்தச் சுவட்டையும் தனித்துக் காட்டவுமில்லை, கொண்டிருக்கவுமில்லை.

அரசியலில் எதிர்பாராத திருப்பங்கள் நிகழும். எதிர்பாராத மாற்றங்களும் நிகழ்ச்சிகளும் நடக்கும். அப்படி உருவாகும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதே அரசியல் வெற்றியாகும்' என்று இதற்கு யாரும் வியாக்கியானம் செய்யக் கூடும். இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். ஆனால், அப்படிக் கிடைத்த வாய்ப்பைக் கொண்டு 2004இல் தன்னை மீளுயிர்ப்புச் செய்த தமிழரசுக் கட்சியின் இரண்டாம் கட்டப் பங்களிப்பு என்னவாக இருந்தது — இருக்கிறது என்பதை அவர்கள் சொல்ல வேண்டும். அதிலும் இறுதிப்போர்க் காலத்தில் தமிழரசுக் கட்சியின் அடையாளத்தோடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் தலைமை தாங்கிய திரு. இராஜவரோதயம் சம்பந்தன், திரு. சேனாதிராஜா உள்ளிட்ட முன்னணித் தலைவர்கள் இதற்குப் பதிலளிக்கும் வரலாற்றுப் பொறுப்புடையோர். குறைந்த பட்சம் அந்தப் போரை, போரில் நடந்த பேரழிவை வன்மையாக எதிர்ப்ப



தற்கான குறியீட்டளவிலான முயற்சிகளைக் கூட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எடுக்கவில்லை. இந்த வரலாற்றுப் பழி அதற்கு நிரந்தரமாகவே உண்டு.

இறுதிப்போரின் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வழிநடத்திக் கொண்டிருந்தது தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சம்பந்தன் மாவை அணி தான். அந்த வழிநடத்தலும் தலைமைத்துவமும் தவறானது, உறுதியற்றது, அரச சார்பானது என்ற எதிர்ப்பை வெளிப்படுத்தியே கஜேந்திரகுமார், பத்மினி சிதம்பரநாதன், ஜெயானந்தமூர்த்தி, கஜேந்திரன் உள்ளிட்ட அணி வெளியேறியது.

2009க்குப் பின்னர் முற்று முழுதாக தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கத்தின் கீழேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இயங்கியது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் பங்கேற்ற ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ மற்றும் புளொட் போன்றவை தமக்கான சமநிலையைக் கோரிய போதும் அதைத் தமிழரசுக் கட்சி வழங்கவில்லை. கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்ற ஏனைய கட்சிகளின் கோரிக்கையையும் சம்பந்தனும் தமிழரசுக் கட்சியும் நிராகரித்தனர். அதையெல்லாம் பிடிவாதமாகவே மறுத்தார் சம்பந்தன். சம்பந்தன் மட்டும் தான் மறுத்தார் என்றில்லை. ஒட்டுமொத்தத் தமிழரசுக் கட்சியினரும் சம்பந்தனுடைய நிலைப்பாட்டை ஆதரித்தே நின்றனர். மட்டுமல்ல, ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் மூலம் அரசியல் அரங்கில் நுழைந்த சிவஞானம் சிறிதரன், சி. சிவமோகன், துரைராசா ரவிகரன், ஐங்கரநேசன் போன்றோரை உறிஞ்சித் தன்வசப்படுத்தியது தமிழரசுக் கட்சி.

இது கூட்டமைப்பைச் சிதைக்கும் நடவடிக்கை மட்டுமல்ல, அரசியல் நாகரீகமற்ற செயலும் கூட. அப்படியிருந்தும் ஈ.பி.ஆர்.எல்.எவ் கூட்டமைப்பின் ஒற்றுமைக்காகப் பொறுத்திருந்தது. அந்த விட்டுக் கொடுப்பையும் பெருந்தன்மையையும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பலவீனமாக தமிழரசுக் கட்சி எடுத்துக் கொண்டது. இதனால் ஈ.பி. ஆர்.எல்.எவ கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் வெளியேறிய பின், ரெலோவையும் புளொட்டையும் தன்னுடைய இரண்டு கால்களுக்கிடையிலும் தமிழரசுக்கட்சி வைத்துக் கொண்டது. இதற்குச் சம்மதமில்லை என்றால் கூட்டமைப்பை விட்டு வெளியேறலாம் என்று சம்பந்தன் வெளிப்படையாகவே மிரட்டலாகவே சொன்னார்.

இப்படித் தான் தமிழரசுக் கட்சி தன்னுடைய இரண்டாம் கட்ட வளர்ச்சியை — 2004க்குப் பிறகான இன்றைய நிலையை சூதான முறையில் எட்டியது. இதில் எங்கே கண்ணியமும் அறமும் உண்டு?

அரசியலில் அறமும் கண்ணியமும் கிடையாது. வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதும் தந்திரங்களைக் கைக் கொள்வதும் வென்று முன் செல்வதும் நிலை நிறுத்துவதுமே அடிப்படை' என்று இதற்கும் யாரும் வியாக்கியானம் சொல்லலாம்.



கட்சியை வளர்த்துக் கொள்வதற்காக தன்னோடு இணைந்து நின்ற தரப்புகளையே உறிஞ்சித் தோற்கடிக்கத் தெரிந்த தமிழரசுக் கட்சிக்கு கட்சியினருக்கு எதிர்த்தரப்பாக அரசாங்கத்திடமிருந்து மக்களுக்கான தேவைகளையோ உரிமைகளையோ பெற முடியவில்லை. குறைந்த பட்சம் அரசாங்கத்துக்கு சிறிய அளவிலேனும் நெருக்கடியை உருவாக்க முடியவில்லை.

பிராந்திய சக்தியாகிய இந்தியாவைத் தமிழருக்குச் சாதகமாக்கவில்லை. சர்வதேச சமூகத்தை வென்றெடுக்க முடியவில்லை. ஆனால் அதற்கான வாய்ப்புகளிருந்தன. 2009க்குப் பிறகான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இடத்தை அதற்கு மக்களும் சர்வதேச சமூகமும் வழங்கிய மதிப்பை — ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். உலகின் அத்தனை தலைவர்களோடும் சம்பந்தன் கைகுலுக்கியிருக்கிறார். படமெடுத்திருக்கிறார். ஒரு தடவை இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்கிறார். ஒரு காலகட்டம் (2015 — 2020 வரை) அரசாங்கத்தோடு இணக்கமான உறவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இருந்திருக்கிறது.

இப்படியெல்லாம் அருமையான


கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -





வாய்ப்புகளிருந்தும் தமிழரசுக் கட்சியோ சம்பந்தன் அணியோ தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த நன்மைகள் என்ன? தமிழரின் அரசியலில் உருவாக்கிய பெறுமதிகள் என்ன?

இவ்வளவுக்கும் 2009க்குப் பிறகான ஈழத் தமிழரின் அரசியலில் தமிழரசுக் கட்சியே தலைமை தாங்கியிருக்கிறது. ஆகவேதான் தமிழரசுக் கட்சியிடம் நாம் கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது. 2009 க்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகால அரசியலில் எந்த நல்விளைவையும் உருவாக்காமல் விட்டதற்கும் நன்மை எதையும் தமிழர்கள் பெற முடியாமற் போனதற்கும், தமிழரசுக் கட்சியே பொறுப்பு. அதை அது நேர்மையாக ஏற்க வேண்டும். இப்பொழுது இந்தக் கட்டுரையின் தொடக்கப்பகுதிக்கே வரலாம்.

தமிழரசுக் கட்சியின் முதற்கட்டத்திலும் அது தோல்வியையை சந்தித்தது. இரண்டாம் கட்டத்திலும் அது தோல்வியே கண்டிருக்கிறது. ஆம், அது தன்னுடைய அரசியல் வரலாற்றில் எந்தப் பெறுமானங்களையும் உருவாக்கவில்லை.

அப்படி அது ஏதாவது வரலாற்றுப் பெறுமதிகளை உருவாக்கியிருந்தால், தமிழரசுக் கட்சியோ, அதனுடைய வலுவான ஆதரவாளர்களோ, அரசியலைப் பற்றிய சுயாதீன மதிப்பீட்டாளர்களோ ஆதாரங்களை முன்வைத்து வாதிடலாம், (22ம் பக்கம் பார்க்க)

# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

**ID08121089** (F)
24yrs, 5'2" , Single , Uthiraadam , 10 Sevai , Masters Degree , Admin , Canada

**ID08121031** (F)
29yrs, 5'4" , Single , Bharani , N/A Sevai , Diploma , HR Coordinator , Canada

**ID08121004** (F)
32yrs, 5'2" , Single , Mrigasheersham , 6 Sevai , Diploma , No work , Sri Lanka

**ID08121002** (F)
32yrs, 5'3" , Single , Aswini , 12 Sevai , Bachelors.. , Process Associate , Sri Lanka

**ID08120927** (F)
34yrs, 5'3" , Single , Kettai , 9 Sevai , Bachelors.. , Product Manager , Canada

**ID08120890** (F)
28yrs, 5'6" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , IT Specialist , Canada

**ID08120771** (F)
30yrs, 5'5" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , Senior Software.. , Sri Lanka

**ID08120696** (F)
31yrs, 5'1" , Single , Thiruvonam , 12 Sevai , Masters Degree , Clinical Research.. , Canada

**ID08120686** (F)
33yrs, 5'3" , Single , Swaathi , 2 Sevai , Postgraduate.. , Montessori.. , United States

**ID08120320** (F)
29yrs, 5'4" , Single , Kettai , 4 Sevai , Bachelors.. , Finance Professional , Canada

**ID08120054** (F)
34yrs, 5'5" , Divorced , Rohini , 4 Sevai , Diploma , Farmacy Technician , Canada

**ID08119833** (F)
32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08119603** (F)
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08119509** (F)
28yrs, 5'4" , Single , Visaakam , 7 Sevai , Bachelors.. , Secretary , Canada

**ID08115839** (F)
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08115124** (F)
40yrs, 5'2" , Single , Uthiraadam , N/A Seva , Bachelors.. , Pharmacist , New Zealand

**ID08115839** (F)
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08120732** (F)
30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka

**ID08120728** (F)
40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727** (F)
24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120723** (F)
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia

**ID08120722** (F)
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka

**ID08120721** (F)
23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka

**ID08120718** (F)
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08120794** (F)
24yrs, 5'4" , Single , Poosam , N/A Sevai , Bachelors.. , Dental Assistant , Canada

**ID08120795** (F)
31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

**ID08120799** (F)
45yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120803** (F)
21yrs, 4'10" , Single , Not Specified , N/A Sevai , High School , Beautician , Canada

**ID08120802** (F)
19yrs, 5'4" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Bachelors.. , MSc intended.. , Canada

**ID08120805** (F)
30yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

## மணமகன்



**ID08121077** (M)
32yrs, 5'9" , Single , Thiruvonam , 3 Sevai , Bachelors.. , Business Owner , Canada

**ID08121068** (M)
32yrs, 5'11" , Single , Poosam , N/A Sevai , Bachelors.. , Entrepreneur , France

**ID08121062** (M)
32yrs, 5'5" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , IT Specialist , Sri Lanka

**ID08121023** (M)
45yrs, 5'6" , Single , Uthiraadam , 12 Sevai , High School , Packing Supervisor , Canada

**ID08120957** (M)
31yrs, 5'6" , Single , Chithirai , 1 Sevai , Postgraduate.. , Retail Manager , Canada

**ID08120946** (M)
47yrs, 5'6" , Divorced , Anusham , N/A Sevai , Diploma , Self Employee , Canada

**ID08120938** (M)
46yrs, 5'4" , Single , Aswini , 6 Sevai , Bachelors.. , IT System.. , India

**ID08120936** (M)
38yrs, 5'8" , Single , Karthigai , N/A Sevai , Masters Degree , Civil Engineer , United Kingdom

**ID08120935** (M)
36yrs, 5'5" , Single , Poosam , N/A Sevai , Bachelors.. , IT , Sri Lanka

**ID08117127** (M)
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08113686** (M)
45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada

**ID08120639** (M)
35yrs, 5'6" , Single , Makam , 8 Sevai , Bachelors.. , Own Bussiness , United States

**ID08120583** (M)
32yrs, 5'10" , Single , Poorattathi , 9 Sevai , Bachelors.. , Project Engineer , Canada

**ID08120564** (M)
33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator ,Canada

**ID08120356** (M)
30yrs, 6' , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Electric , Canada

**ID08120270** (M)
34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada

**ID08120144** (M)
35yrs, 5'9" , Single , Visaakam , 8 Sevai , Diploma , Own Business.. , Canada

**ID08119698** (M)
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120481** (M)
30yrs, 5'7" , Single , Poorattathi , 7 Sevai , Bachelors.. , Research Associate , Canada

**ID08116778** (M)
37yrs, 5'9" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Manager Financial.. , Canada

**ID08116404** (M)
43yrs, 5'4" , Single , Makam , N/A Sevai , High School , Business , Sri Lanka

**ID08115828** (M)
31yrs, 5'9" , Single , Mrigasheersham , 10 Sevai , Bachelors.. , Trading Associate , Canada

**ID08111978** (M)
45yrs, 5'5" , Single , Anusham , 2 Sevai , High School , Magna INC , Canada

**ID08120734** (M)
35yrs, 5'7" , Seperated , Not Specified , N/A Sevai , Masters Degree , Fama prodecsoen.. , Sri Lanka

**ID08120801** (M)
70yrs, 5'10" , Divorced , Visaakam , N/A Sevai , Diploma , Security Officer , Canada

**ID08120796** (M)
30yrs, 5'9" , Single , Thiruvonam , 8 Sevai , High School , Truck Driver , Canada

**ID08120766** (M)
34yrs, 5'4" , Single , Pooraadam , 1 Sevai , High School , Business , Canada

**ID08120751** (M)
33yrs, 5'7" , Single , Thiruvonam , 11 Sevai , Bachelors.. , General practitioner , United Kingdom

**ID08120734** (M)
36yrs, 5'7" , Annulled , Bharani , 5 Sevai , Masters Degree , Product manager , Sri Lanka

**ID08120694** (M)
40yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

# டிரம்ப் நிபந்தனையின்றி விடுவிப்பு! ஏன்? விசாரணையில் என்ன நடந்தது?

அமெரிக்க அதிபராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள டொனால்ட் டிரம்ப், ஆபாசப் பட நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸை அமைதிப்படுத்த பணம் கொடுத்த வழக்கில் 34 குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தீர்ப்பை வழங்கும்போது நீதிபதி மெர்ச்சன், 'உங்கள் இரண்டாவது பதவிக் காலத்தில் வெற்றி பெற வாழ்த்துகிறேன்,' என்று கூறியுள்ளார்.

டிரம்பை நிபந்தனையின்றி விடுவிக்க நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. அதாவது இந்த வழக்கில் அவர் எந்த அபராதமும் செலுத்த வேண்டியதில்லை, சிறைத் தண்டனையையும் அனுபவிக்க வேண்டியதில்லை.

இந்த வழக்கில் டிரம்ப் குற்றவாளிதான் என்பதை உறுதி செய்த நீதிபதி, அவருக்கு சிறைத் தண்டனை அல்லது அபராதம் என எதுவுமின்றி 'நிபந்தனையின்றி விடுவிப்பதாக தெரிவித்துள்ளார். இதன் மூலம் டிரம்ப் வெள்ளை மாளிகைக்கு எந்தச் சிரமமும் இன்றிச் செல்லலாம் என்றாலும், அவரது பதிவேடுகளில் இந்த வழக்கில் குற்றவாளி எனப் பதிவு செய்யப்படும்.

இந்த வழக்கில் டிரம்பை நிபந்தனையின்றி விடுவிப்பது நாட்டின் மிக உயர்ந்த பதவியை மீறாமல் வழங்கப்படும் ஒரு சட்டப்பூர்வ தண்டனை என்று நீதிபதி மார்ச்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு, ஆபாசப்பட நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸுக்கு பணம் கொடுத்தது தொடர்பான வழக்கில் டிரம்ப் மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்த வழக்கில் அவர் கடந்த ஆண்டு மே மாதம் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டார்.

ஜனவரி 20ஆம் தேதியன்று டிரம்ப் இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராகப் பதவியேற்கவுள்ளார்.

சுமார் 30 நிமிடங்கள் மட்டுமே நீடித்த இந்த விசாரணையில், அதிபராகத் தேர்வு செய்யப்பட்ட டிரம்ப் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, அவரை நிபந்தனையின்றி விடுவிப்பதை' நீதிபதி தண்டனையாக விதித்துள்ளார்.

இதன் மூலம் டொனால்ட் டிரம்ப் அமெரிக்க வரலாற்றில் குற்றவியல் தண்டனை பெற்ற முதல் அதிபராக வெள்ளை மாளிகையில் பணியாற்றுவார். அவருக்கு சிறை, அபராதம் அல்லது நன்னடத்தை என எதையும் எதிர்கொள்ள மாட்டார். அடுத்த 10 நாட்களில் டிரம்ப் பதவியேற்கும் சூழ்நிலையில் இதுதான் 'ஒரே சட்டப்பூர்வ தண்டனை' என்று நீதிபதி ஜுவான் மெர்ச்சன் கூறியுள்ளார்.

வீடியோ காலில் ஆஜரான டிரம்ப், இந்த விசாரணையில் பேசிய போது தாம்



நிரபராதி என்றும் இது 'மிகவும் பயங்கரமான அனுபவம்' என்றும் கூறினார்.

அரசு வழக்கறிஞர் ஜோஷுவா ஸ்டீங்லாஸ் நீதிமன்றத்தில், டிரம்ப் 'குற்றவியல் நீதி அமைப்பு பற்றிய பொதுமக்களின் கருத்துக்கு நீடித்த சோகத்தை' ஏற்படுத்தியதாகக் கூறினார். ஆனால், இந்த வழக்கை முடிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஒப்புக்கொண்டார்.

தண்டனைக்குப் பிறகு ஆன்லைனில் ஒரு பதிவில், டிரம்ப் இந்த விசாரணையை 'ஒரு வெறுக்கத்தக்க ஏமாற்று வேலை' என்று குறிப்பிட்டார். மேலும், மேல்முறையீடு செய்யப் போவதாகவும் கூறியுள்ளார்.

முன்னதாக, இதற்கான தண்டனையை வழங்குவதை தாமதப்படுத்தும் நடவடிக்கையில் டொனால்ட் டிரம்ப் ஈடுபட்டார். அதற்காக அமெரிக்க உச்சநீதிமன்றத்தை நாடிய அவர், அவருக்கு வழங்கவுள்ள தண்டனையை நிறுத்த வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்தார். அதை உச்சநீதிமன்றம் நிராகரித்தது. இந்த வழக்கில் வழங்கப்படும் தண்டனையை தாமதப்படுத்தத் தனக்கு உரிமை உள்ளதா என்று மேல்முறையீட்டு மனு மூலமாக உச்சநீதிமன்றத்திடம் டிரம்ப் கேட்டிருந்தார். ஆனால், 5 நீதிபதிகள் அவரின் கோரிக்கைக்கு எதிராகவும், 4 நீதிபதிகள் அவரின் கோரிக்கைக்கு ஆதரவாகவும் தீர்ப்பளித்தனர்.

அதன் பிறகு, டிரம்பின் வழக்கறிஞர்கள் பலரும், மன்ஹாட்டன் குற்றவியல் வழக்கில் அதிபராகத் தேர்வு செய்யப்பட்ட டிரம்புக்கு குற்றவியல் வழக்குகளில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக நீதிபதிகளை வற்புறுத்த முயற்சிகள் மேற்கொண்டனர்.

மேலும் மன்ஹாட்டன் வழக்கறிஞர்கள், இந்த வழக்கு குறித்து உச்சநீதிமன்றத்திற்கு அளித்த சிறு விளக்கத்தில், 'இத்தகைய விலக்கை எந்தவொரு நீதிமன்றத்தின் முடிவாலும் ஆதரிக்க இயலாது,' என்று குறிப்பிட்டனர்.

தற்போது டொனால்ட் டிரம்ப், ஆபாசப் பட நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸை அமைதிப்படுத்த பணம் கொடுத்த வழக்கில் 34 குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆபாசப் படங்களில் நடித்தவரான நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸுக்கு 2016ஆம் ஆண்டு, சட்ட செலவுகளுக்காக 1,30,000 அமெரிக்க டாலர்களை டொனால்ட் டிரம்ப் வழங்கியுள்ளார்.

இது குறித்த வழக்கில் டிரம்ப் குற்றவாளி என்று 2024ஆம் ஆண்டு மே மாதம் தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில், டிரம்புக்கு நியூயார்க்கில் வரும் ஜனவரி 10ஆம் தேதியன்று தண்டனை அறிவிக்கப்படும் என நீதிபதி முன்னதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கில், 'டிரம்புக்கு சிறைத் தண்டனை, அபராதம் போன்ற எதுவும் விதிக்கப்படாது. மாறாக இதற்கு 'சரியான தீர்வு கண்டு வழங்கப்படும். அமெரிக்க அதிபராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள அவர் இந்த விசாரணைக்கு நேரிலோ அல்லது காணொளி வாயிலாகவோ கலந்து கொள்ளலாம்.' என்று நியூயார்க் நீதிமன்றத்தின் நீதிபதி ஜுவான் மெர்ச்சன் உத்தரவிட்டிருந்தார்.

கடந்த 2016ஆம் ஆண்டு அதிபர் தேர்தல் பிரசாரத்தின் இறுதிக் கட்டத்தில் டிரம்புடனான தனது பாலியல் உறவு குறித்து வெளியே பேசாமல் இருக்க நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸுக்கு டிரம்பின் முன்னாள் வழக்கறிஞர் மைக்கேல் கோஹன் பணம் கொடுத்தார். இதை மறைப்பதற்கான முயற்சிகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் இந்த வழக்கில் இடம் பெற்றிருந்தன.

இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் டிரம்ப் மறுத்தார். தான் குற்றமற்றவர் என்று குறிப்பிட்டார். மேலும், இந்த வழக்கு அவரது 2024 தேர்தல் பிரசாரத்துக்குத் தீங்கு விளைவிக்கும் முயற்சியாக இருப்பதாக வாதிட்டார்.

அதிபராகத் தேர்வு செய்யப்பட்ட டிரம்புக்கு ஆரம்பத்தில் நவம்பர் 26ஆம் தேதியன்று தண்டனை அறிவிக்கத் திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால், டிரம்ப் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு நீதிபதி மெர்ச்சன் தண்டனை அறிவிக்கும் தேதியை ஒத்தி வைத்தார். அதைத் தொடர்ந்து இன்று தீர்ப்பளித்த அவர், டிரம்புக்கு 'நிபந்தனையின்றி விடுவித்து' தண்டனை வழங்கியுள்ளார்.–பிபிசி

## கிளீன் ஸ்ரீலங்கா:-

(15ம் பக்கத் தொடர்ச்சி) புத்திஜீவிகளில் பெரும் பகுதியினரும் அப்படித்தான் கூறி வருகிறார்கள். பொருளாதார நெருக்கடியின் மூல காரணத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பதும் ஒரு வகையில் இனவாதம்தான்.

ஆனால் இப்பொழுது இனப்பிரச்சினையில் கை வைத்தால், அதாவது ஒரு புதிய யாப்பை உருவாக்கும் விடயத்தில் கை வைத்தால், அது இளம் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடும் என்று ஒரு விளக்கம் கூறப்படுகிறது.எனவே பொருளாதார நெருக்கடியை ஓரளவுக்குத் தணித்தபின், ஜனாதிபதியின் பதவிக்காலத்தின் இறுதிக் கட்டத்தில் இனப்பிரச்சினையில் கை வைக்கலாம் என்றும் ஒரு விளக்கம் கூறப்படுகிறது.இது வண்டிலுக்குப் பின் மாட்டைக் கட்டும் வேலை. நோய்க்கு உரிய உள்மருந்தை வழங்காமல்.வலி நிவாரணிகளை மட்டும் வழங்கும் ஓர் அரசியல்.

எனவே இந்த இடத்தில் மாற்றத்தைச் செய்ய அனுரவால் முடியாது. அவருக்குக் கிடைத்த வெற்றியின் கைதி அவர்.அந்த வெற்றியை மீறி அவர் சிந்திக்க முடியாது. அதனால் தான் கவர்ச்சியான சுலோகங்களை முன் வைக்கின்றார். நாட்டைச் சுத்தப்படுத்தப் போவதாகக் கூறுகிறார். ஆனால் நாட்டின் உண்மையான கறை அப்படியே இருக்கத் தக்கதாக அதன் விளைவாக வந்த கறைகளை அகற்றுவது என்பது வலி நிவாரணி அரசியல் தான். எனவே நாட்டைச் சுத்தப்படுத்துவது என்றால் இனப்பிரச்சினை என்ற கறையை அகற்ற வேண்டும். அங்கிருந்து தான் சிறீலங்காவைக் கிளீன் பண்ணத் தொடங்க வேண்டும்

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# உலகம் போற்றும் ஆத்மிக அன்னை சிவத்தமிழ் செல்வியின் நூற்றாண்டு விழா!

ஈழத்திருநாடு செய்த மாதவத்தால் 1925ம் ஆண்டு ஜனவரி ஏழாம் நாள் தெல்லிப்பழை மண்ணில் உதித்தவர் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

நிறைந்த கடவுள் பக்தியுடைய அப்பாக்குட்டி தையல்ப்பிள்ளை தம்பதியினருக்கு புத்திரியாகப் பிறந்தவர் அன்னை. சிறுவயதிலேயே ஆத்மிக நாட்டத்துடன் தேவாரா திருவாகத்தை மனனம் செய்வதில் அக்கறை கொண்டவர்.

தனது ஆரம்பக்கல்வி மூலம் ஆசிரியப் பயிற்சி கலாசாலை வாழ்வு வரை முதன்மை மாணவியாகத் திகழ்ந்தவர். இளம் வயதிலேயே பண்டிதர் பரிட்சையிலும் சித்தி பெற்றவர். சைவப்புலவர் பரிட்சையிலும் தோற்றி சிறந்த பெறுபேறு பெற்றார். ஐம்பதுகளில் மேடைப் பேச்சில் அறிமுகமாகி சமயப் பிரசங்கம் செய்வதில் வல்லவரானார்.

மட்டக்களப்பிலுள்ள சென்ற்சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகவும், கொழும்பிலுள்ள பாத்திமா பெண்கள் பாடசாலையிலும் ஆசிரியர் பணியாற்றி 1958இல் நடைபெற்ற கலவரத்தின் பின் அளவெட்டி சதானந்தப் பாடசலையிலும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி ஆத்மிகப் பணிக்காக அறுபது வயதிற்கு முன்பே ஓய்வு பெற்றார்.

பெண்கள் மேடைக்கு ஏறுவதில் அஞ்சிய காலத்தில் ஆன்மிக மேடை



களிலும் இலக்கிய மேடைகளிலும் தனது ஆற்றலை மேம்படுத்தி பெரும் புகழைப் பெற்றவர். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் போன்ற நாடுகளுக்குச் சென்று தனது சொல் வன்மையால் பலரது மனங்களை ஈர்த்தவர்.

1965,ல் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபையில் இணைந்து 2008ஆம் ஆண்டு வரை மிக அர்ப்பணிப்போடு தேவஸ்தான வளர்ச்சியில் செயற்பட்டவர். தேவஸ்தான தனாதிகாரியாகவும் பின் தலைவராகவும் ஒப்பற்ற பணியாற்றியவர். சிறிய கோயிலாக விளங்கிய ஆலயத்தை தேசம் போற்றும் கோவிலாக மாற்றிய பெருமை அவரையே சாரும்.

அறச்சிந்தனை நிறைந்த அம்மையார் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தை அறச்சாலையாக மாற்றினார். 1982ஆம் ஆண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை தோற்றுவித்து ஆதரவற்ற பெண் பிள்ளைகளை அரவணைத்து அவர்கள் வாழ்விற்காக அயராது உழைத்தார். அம்மையாரின் உயர்ந்த தொண்டால் தேவஸ்தானப் பணிகள் விரிவடைந்தன நல்லூரில் ஸ்ரீதுர்க்கா தேவி மணிமண்டபத்தினை அமைத்து நல்லூர் கந்தனைத் தரிசிக்கும் அடியவர்களின் பசி போக்கும் அன்ன தானப் பணியை ஆரம்பித்து வைத்தார்.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனையை மனதில் நிறுத்தி பல மறுமலர்ச்சித் திட்டங்களை எம் மண்ணில் ஏற்படுத்திய பெருமை அம்மையாரையே சாரும். போரினால் இடம் பெயர்ந்து துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தஞ்சமடைந்த பல ஆயிரம் அகதிகளுக்கு அன்னம் பாலித்து ஆதரவு வழங்கியவர் அம்மையார். ஆலயத்தில் திருமுறைமடம் அமைத்து பன்னிரு திருமுறைகளை சைவ மக்கள் பாதுகாக்க வேண்டும் என்று அரும்பாடுபட்டார்.

பல மேடைகளில் அறக்கருத்துக்களை ஆணித்தரமாகக் கூறி சமூகத்தை விழிப்படையச் செய்தார். கோயில்களில் நடைபெறும் மிருக பலியை எதிர்த்தார். கோயில்களில் பெண்கள் பஞ்ச புராணம் பாட வேண்டும், கூட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டும், தொண்டுப் பணிகளில் ஈடுபட வேண்டும் எனக்குரல் கொடுத்தார்.

ஸ்ரீதுர்க்கா தேவஸ்தானத்தில் பெண்கள் தொண்டர் சபையை அமைத்தார். தெல்லிப்பழை இந்து ,ளைஞர் சங்கத்திற்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி இளைஞர்களை ஆற்றுப்படுத்தினார். சமயத்தொண்டு, இலக்கியத் தொண்டு ஆற்றிய சான்றோர்களை விருது கொடுத்து கௌரவித்தார். அம்மையாரின் தூய பணிகள் என்றும் மறக்க முடியாது.

என்னைப் போன்ற ஆன்மிகப் பேச்சாளர்களை ஊக்குவித்தார். 1993இல் தனது பிறந்தநாள் அற நிதியச் சபையை அமைத்தார். 1995இல் வயதில் குறைந்த என்னை தேவஸ்தான நிர்வாக சபையில் சேர்த்து மதிப்புத் தந்தார். சுமார் பதின்னாங்கு ஆண்டுகள் அம்மையாரின் தலைமையில் தேவஸ்தான நிர்வாக சபையில் இணைச்செயலாளராக பயிற்சி பெறும் வாய்ப்பைப் பெற்றேன். அம்மையாரிடம் யான் கற்றவை ஏராளம்.

இன்று அம்மையாரின் பொறுப்புக்களை யான் தலைமையேற்று நடாத்துவதற்கு அவரிடம் பெற்ற உன்னதப் பயிற்சியே காரணம் எனலாம். சிறியேனை மிக அன்பாக ஆற்றுப்படுத்திய தாய் எனது வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றார்.

2008ஆம் ஆண்டு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைமைப் பொறுப்பையும் துர்க்காபுரம் மகளிர் இல்ல தலைமைப் பொறுப்பையும் ஏற்ற யான் துர்க்கையம்மனின் நல்லருளாளும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் ஆசியாளும் (22ம் பக்கம் பார்க்க)


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# தமிழரசில் சுமந்திரன்:-
# காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதையல்ல

- அழகு குணசீலன் -

தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டமும், பொதுச்சபையும் திருகோணமலையில் கூடி கலைந்தது போல் வவுனியாவில் மத்திய செயற்குழு கூட்டம் கூடி ஊடகங்களுக்கு பம்பலாக கலைந்திருக்கிறது. நீதிமன்றத்தில் நான்கு வழக்குகளுக்காக ஏறி, இறங்க வேண்டிய நிலையில் நடந்து முடிந்த வவுனியா கூட்டம் கட்சியின் உள் மோதல்களுக்கு தீர்வு காணப்பட்டது போன்ற ஒரு தோற்றத்தையும், இது தீர்வல்ல பிரிவு என்ற தோற்றத்தையும் ஏற்படுத்தி உள்ளது. ஆகக் குறைந்தது முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் ஆதரவாளர்களுக்கு இது முள்ளை முள்ளால் எடுத்த நிம்மதி. தமிழரசுக்கு தீர்வில்லாவிட்டாலும் சுமந்திரன் அணிக்கு தீர்வு.

தமிழரசுகட்சியில் – தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் சுமந்திரனின் வருகை பலர் நினைப்பது போன்று ஒரு அரசியல் விபத்தோ, அரசியல் தற்செயல் நிகழ்வோ அல்ல. நன்கு திட்டமிட்ட நகர்வு. விடுதலைப்புலிகள் செயலிழக்கும் வரையும் ஓடுமீன் ஓடி உறுமீன் வரும் வரையும் கொக்கு காத்திருந்த கதை. 2001இல் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அமைக்கப்பட்டு அதற்கு தலைவராக இரா. சம்பந்தன் புலிகளால் நியமிக்கப்பட்ட போதும் மானசீகமாக சம்பந்தன் புலிகளின் அரசியலை ஆதரிக்கவில்லை.

ஒற்றையாட்சிக்குள் ஒரு தீர்வு. இதுவே சம்பந்தனது மட்டும் அல்ல ஒட்டு மொத்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பினதும் பின்கதவு அரசியலாக இருந்தது. இது தமிழீழம் ஒரு வில்லங்கமான காரியம் என்ற எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் வார்த்தைகளின் உள்ளீட்டை தமிழ்மக்கள் அனுபவித்துக் கொண்டிருந்த காலம் என்பதால் இதற்கான நியாயப்பாடு தமிழர் அரசியல் தராசில் ஒரு பக்க தராசுத் தட்டை கதிக்கச்செய்தது.

மறு பக்கத்தில் புலிகள் தவிர்ந்த ஆயுத போராட்ட அமைப்புக்களின் பாராளுமன்ற அரசியல் பிரவேசம் இதை மேலும் உறுதிப்படுத்தியது. இந்த அமைப்புக்களும் – கட்சிகளும் தமிழீழத்தை புலிகளின் துப்பாக்கி தங்களை குறி பார்த்ததால் ஆயுத போராட்டத்தில் தாங்களாகவே தோற்றும், தோற்கடிக்கப்பட்டும் இருந்த நிலையில் கொண்ட கொள்கையில் அரசியல் கற்பு இவர்களிடமும் இருக்கவில்லை.

இந்த நிலையில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் அரசியல் செயற்பாட்டு துடுப்பு விடுதலைப்புலிகளின் கைகளில் இருந்தது. அதுவரை தலையாட்டும் அரசியல் செய்த கூட்டமைப்பு 2009 மே மாதத்திற்கு பின்னர் மெல்ல மெல்ல சுயரூபத்தை வெளிப்படுத்தத் தொடங்கியது.

ஒரு புறம் கிளிநொச்சி சந்திப்புக்களில் ஒன்றும், கொழும்பு சந்திப்புக்களில் இன்னொன்றும் பேசி வந்த இரா.சம்பந்தருக்கும், எம்.ஏ. சுமந்திரனுக்கும் இடையிலான கொழும்பு உறவில் நெருக்கம் ஏற்பட்டது. சம்பந்தரின் நம்பிக்கையை திட்டமிட்டபடி சுமந்திரன் பெற்றார்.

சாத்தியமற்ற தமிழீழம், பிராந்திய, சர்வதேச பூகோள அரசியல் சூழல்கள் பற்றிய கலந்துரையாடல்களில் இவர்கள் இருவரும் ஒரு புள்ளியில் சந்தித்தனர். விளைவு 2010 பாராளுமன்ற தேர்தலில் முள்ளிவாய்க்கால் வலியோடு தமிழ்மக்கள் பெற்றெடுத்த தேசிய பட்டியல் குழந்தையை தூக்கி சாய்மனைக்கதிரை கொழும்பு வாசி சுமந்திரனுக்கு சம்பந்தர் கொடுத்தார்.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னர் தமிழ்த்தேசிய அரசியலை தங்கள் திசைக்கு திருப்ப புலிகளின் கையில் இருந்த துடுப்பு சம்பந்தருக்கும், சுமந்திரனுக்கும் கைமாறியது. சம்பந்தரின் வயோதிபம் அவருக்கு நம்பிக்கையான ஒரு கையாளைத் தேடியது. அந்த இடத்தை சம்பந்தர் சுமந்திரனுக்கு கொடுத்தார். மறுபக்கத்தில் சம்பந்தரின் முதுமையை சுமந்திரன் பயன்படுத்தி, கட்சியில் முக்கிய செயற்பாட்டாளராக மாறத் தொடங்கி



னார்.

சம காலத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் தமிழரசு உள்ளிட்ட பங்காளிகள் கட்சிகளின் பலவீனங்களை சுமந்திரனால் இலகுவாக அடையாளம் கண்டு அரசியல் செய்ய முடிந்தது. பாராளுமன்றத்திற்கு உள்ளும், வெளியும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முற்று முழுதாக சுமந்திரனில் தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டது. சம்பந்தர் எதிர்கட்சி தலைவருக்கு வழங்கப்பட்ட அனைத்து வரப் பிரசாதங்களுடனும் கொழும்பு அரசாங்க மாளிகையில் முடங்கிப் போனார். இது ஒரு வகையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் முதுமையை அ.அமிர்தலிங்கம் பயன்படுத்தியதற்கு ஒப்பானது.

இந்த அரசியல் சூழ்நிலையில், சரியாக காலக்கணக்கை பார்த்து வந்த எம்.ஏ. சுமந்திரன் தருணம் பார்த்து இரா.சம்பந்தர் தலைமை பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கையை பகிரங்கமாக முன்வைத்தார். இது பல விமர்சனங்களுக்கு வழிவிட்டபோதும் தமிழ்த்தேசிய அரசியலை முன்னோக்கி நகர்த்துதல் என்பதில் சாதகமானதாக நோக்கப்பட்டது.

ஆனால் சுமந்திரனின் தனிப்பட்ட, அரசியல் குணாம்சங்களை நன்கு அறிந்திருந்தவர்கள், சம்பந்தரின் செயற்பாடற்ற பலவீனமான அரசியலை அறிந்திருந்தும் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர். ஆனால் சுமந்திரனின் அரசியல் தந்திரோபாய உட்கட்சி நகர்வுகளை அறியாதவர்களும், அவரது வாதத்திறமையையும், அரசியல் நியாயப்படுத்தல்களையும் சர்வதேச உறவுகளையும், பாராளுமன்ற செயற்பாடுகளையும் மட்டும் அறிந்தவர்களும் சுமந்திரனுக்கு பின்னால் ஆதரவாக நின்றனர்.

2010இல் இருந்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் பல்வேறு காரணங்களுக்காக உடைவுகள் ஏற்பட்டன. ஒத்தி வைக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தலில் சுமந்திரனின் பங்காளிகள் தனித்து போட்டியிடல் என்ற தொழில் நுட்பம் – பொறிமுறை தமிழ்த்தேசிய கூட்டமைப்பை தமிழரசுக்கட்சி என்ற நிலைக்கு கொண்டு வந்தது.

2015, 2020 தேர்தல்களில் சுமந்திரன் மீதான மக்கள் நம்பிக்கை படிப்படியாக குறைவடைந்து 2024 இல் சுமந்திரன் மக்களால் நிராகரிக்கப்பட்டார். இதற்கு என்னதான் காரணங்களை கூறினாலும் அந்த காரணங்களில் சுமந்திரனின் கடந்த 15 ஆண்டு கால தமிழ்த்தேசிய அரசியலுக்கும் பங்குண்டு. அதை அவர் சுய விமர்சனம் செய்ததாக தெரியவில்லை. தனது நிலைப்பாடே சரியென தனித்து ஓடும் சுமந்திரன் இதை செய்வார் என்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. பாராளுமன்ற அரசியலில் சம்பந்தரினதும், பங்காளிக்கட்சிகளினதும் பலவீனங்களை பயன்படுத்தி பாராளுமன்ற குழுவை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த சுமந்திரன் அடுத்த நகர்வாக தமிழரசு கட்சியை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வர களத்தில் இறங்கினார். மாவை சேனாதிராஜாவின் தலைமைத்துவ பலவீனமும், வயோதிபமும் சம்பந்தர் காலம் போன்று மீண்டும் ஒரு வாய்ப்பை சுமந்திரனுக்கு வழங்கியது.

கட்சிக்குள் தனக்கு சாதகமாக சி.வி.கே.சிவஞானம், சத்தியலிங்கம், சாணக்கியன், துரைராசசிங்கம் போன்றவர்களை வளைத்துப் போட்ட சுமந்திரன் தலைமை பதவிக்கு போட்டியிட்டார். எனினும் அவரால் வெற்றி பெறமுடியவில்லை.

வெற்றி பெற்ற சி.சிறிதரன் பதவியேற்க முடியாதவாறு வழக்கு தாக்கலானது. இந்த இழுபறியில் மாவை சேனாதிராஜாவை பதவியில் இருந்து நீக்கி பதில் தலைவர் ஒருவரை தேர்வு செய்யும் முயற்சியில் அதுவும் தனது சார்பான சி.வி.கே சிவஞானம் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அது சுமந்திரனுக்கு வெற்றியே. தமிழரசுக்கட்சியின் பேச்சாளர் பதவியும் சுமந்திரனுக்கு உறுதியானது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக்கட்சியில் சுமந்திரனின் நிலைப்பாடே கட்சியின் நிலைப்பாடாக முடிவுகளாக எடுக்கப்படுகின்ற நிலை தொடர்கிறது. அதற்கு வாய்ப்பு இல்லாத நிலை காணப்படுமாயின், ஏதோவொரு வகையில் அதற்கான காலம் கனியும் வரை முடிவுகளை எடுப்பதை சுமந்திரன் தனது அணியின் மூலம் சாதித்து வருவது வழக்கம்.

இதற்கான வாய்ப்பை சுமந்திரன் தேடிச் செல்லவில்லை. மாறாக அது காலடிக்கு வரும் வரையும் காத்திருந்து காரியம் செய்கிறார். அந்த வாய்ப்புக்களை அவரின் காலடியில் கொண்டு குவிப்பவர்களாக இரா. சம்பந்தருடன் மாவை.சேனாதிராஜா, சி.சிறிதரன், பா.அரியநேத்திரன், சி.வி. தவராசா போன்றவர்கள் இருக்கிறார்கள். அவற்றை சுமந்திரன் அணி பயன்படுத்துகிறது. இதனால் கட்சியில் சுமந்திரனின் அடைவுகள் காகம் இருக்க பனம் பழம் வீழ்ந்த கதை யல்ல.


எம்.ஏ. சுமந்திரனின் அதே அரசியல் குணாம்சங்களை கொண்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழரசு கட்சிக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளார். இவரின் சிறிதரன், செல்வம் ஊடான நகர்வு நிச்சயமாக சுமந்திரனுக்கு எதிரானது என்பது வெளிச்சம். இது தமிழரசுக்கட்சியின் எதிர்காலத்தில் ஏற்படுத்தப் போகும் தாக்கம் என்ன?

ஒரு சந்தர்ப்பத்தில் சுமந்திரனை திருத்த முடியாது என்று சொன்ன கஜேந்திரகுமார், சுமந்திரன் இல்லாத பாராளுமன்றத்தில் வகிக்கப் போகின்ற முக்கியத்துவம் என்ன? இது பொன்னருக்கு பொல்லு கொடுத்த கதையாக அமையலாம்...





EELANADU 17 Jan 2025 ஈழநாடு

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! எல்லா காரியங்களும் நல்லபடியாக நடக்கும். யோசனைகளை அலுவலகத்திலும் குடும்பத்திலும் மதிப்பார்கள். குடும்பத்தில் உங்களை பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டு கொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ருசியான உணவை உண்பீர்கள். தொழில் செய்பவர்கள் உங்கள் வியாபாராத்தை பெருக்கும் காலமிது.





ரிஸபராசி அன்பர்களே! எல்லா விஷயங்களிலும் ஜாக்கிரதையாகவும், பொறுப்பாகவும் செயல்பட வேண்டும். தங்கள் உடல் நிலை சிறப்பான முன்னேற்றம் அடையும். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே தேவையில்லாத ஒரு விஷயத்தால் கருத்து வேறுபாடு உண்டாகலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. . தொழில் செய்பவர்கள் முதலீடுகள் செய்யும் போது மனைவியின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.





மிதுனராசி அன்பர்களே! மிகுந்த பொருட்செலவில் சுபவிரயங்கள், எடுத்த காரியங்களில் தடை, எதுவுமே நேர்மாறாக இருப்பது என கடந்த காலங்களை மிகுந்த சிரமத்துடன் கழித்தீர்களல்லவா, இனி வரும் காலம் மிகவும் நல்லகாலம். உங்கள் பேச்சை நீங்களே கேட்காமல் இருந்து வந்த நிலைமை மாறும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்த்து பேசுவது நல்லது. துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும்




கடகராசி அன்பர்களே! தடங்கல்கள் அனைத்தும் அகலும். குடும்பத்தில் நல்ல நல்ல விஷயங்கள், விஷேசங்கள் நடக்கும். உங்கள் தைரியத்திற்கு இறைவனை வேண்டுங்கள். பிள்ளைகளின் மேல் கவனம் வைக்க வேண்டும். முன்னோர்களை அமாவாசை தோறும் வழிபடவும். தொழில் செய்பவர்கள் புதிய முதலீடுகள் செய்யும் போது கவனம் தேவை. அனுபவமிக்கவர்களுடன் கலந்து ஆலோசித்து முதலீடு செய்வது நலம்.





சிம்மராசி அன்பர்களே! தீவிர முயற்சியால் தடைபட்டிருந்த திருமணம், கல்வி, என தடையாக இருந்த அனைத்து காரியங்களும் தடைகள் விலகி ஒன்றன் பின் ஒன்றாக சிறப்பாக நடக்கும். குடும்பத்தில் நடை பெறும் சில விஷயங்கள் உங்கள் கோபத்தை தூண்டலாம். எனவே வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் மிகவும் கவனமாக பேசுவதன் மூலம் நன்மை உண்டாகும்.




கன்னிராசி அன்பர்களே! முயற்சிகளை இரு மடங்காக்குங்கள், வெற்றிகள் உங்களைத் தேடி வரும் காலமிது. உங்கள் பொன்னான நேரத்தை அடுத்தவருக்காக வீணாக்காதீர்கள். அடுத்தவரை பற்றி பேசா விட்டாலும் நீங்கள் கூறியதாக சிலர் பற்ற வைக்க கூடும். குடும்பம் பற்றிய கவலைகள் ஏற்பட்டாலும் அவை நீங்குவதுடன் உடல் ஆரோக்கியமும் அடையும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நல்லது.





துலாம்ராசி அன்பர்களே! நல்ல விஷயங்களை தள்ளிப் போட வேண்டாம். வீடு, மனை, ஆடை, ஆபரணங்கள் போன்ற விஷயங்களில் அவசரம் வேண்டாம். குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும். தொழிலில் லாபகரமான முதலீடுகளில் முதலீடு செய்ய தகுதியானவர்களின் ஆலோசனைகளை பெற்று செய்யவும். உத்யோகஸ்தர்களுக்கு பணி செய்யும் இடத்தில் எச்சரிக்கை தேவை.





விருச்சிகராசி அன்பர்களே! கிடைத்தவற்றை வைத்து நிம்மதி அடையும். உங்கள் வாக்கு வன்மை கூடும். உங்கள் பேச்சிற்கு மதிப்பு கிடைக்கும். குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. தொழில் செய்பவர்கள் லாபகரமான முதலீடுகள் செய்ய தயங்க வேண்டாம். தாய் தந்தையரை வணங்கி எந்த காரியத்தையும் ஆரம்பித்தால் வெற்றியே.








தனுசுராசி அன்பர்களே! வீடு, மனை வாங்க தடை, சுபகாரியம் செய்வதற்கு தடை, நற்செயல்கள் எது செய்வதற்கும் இருந்து வந்த தடைகள் நீங்கும். தாயாருடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும்.




மகரராசி அன்பர்களே! தைரியமாக எதையும் எதிர் கொள்வீர்கள். குடும்ப உறவினர்களால் வீண் அலைச்சல் உண்டாகலாம் கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். மன வலிமை அதிகரிக்கும். உறவினர்கள் மத்தியில் மதிப்பு கூடும். தொழில் செய்பவர்கள் லாபகரமான முதலீடுகளில் யாரையும் நம்பவேண்டாம். நல்ல நண்பர்களால் ஆதாயம் நல்ல மதிப்பு கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர் பார்த்திருந்த தனலாபம் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி எற்படும். கணவர், மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். அவர்களது நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் செய்பவர்கள் லாபகரமான தொழில்களில் முதலீடு செய்வது அவசியம்




மீனராசி அன்பர்களே! வருவது வரட்டும் என்ற எண்ணத்துடன் செயல்படுவீர்கள். இயந்திரங்கள், நீர்நிலைகளில் கவனம் தேவை. சோம்பல் கூடவே கூடாது. குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும். விருந்தினர்கள் வருகை இருக்கும். உறவினர்கள், நண்பர்களிடம் கோபத்தை காண்பிக்காமல் பேசுவது நல்லது. தொழில் செய்பவர்களுக்கு நண்பர்கள் உதவிகள் செய்வர். லாபகரமான முதலீடுகள் செய்வீர்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## எந்தப் பெறுமானமும் இல்லாத.....

(17ம் பக்கத் தொடர்ச்சி) மறுத்துரைக்கலாம். இப்படியிருந்தும் மக்கள் அதற்குத்தான் வாக்களித்திருக்கிறார்கள். அதையே ஆதரித்திருக்கிறார்கள். அதுவே வெற்றியடைந்திருக்கிறது என்றால், தமிழரசுக் கட்சியையும் விட ஏனைய தரப்புகள் மோசமாகியுள்ளன என்றே அர்த்தமாகும். என்றபடியால் தான் அருச்சுனா இராமநாதன் போன்ற தன்னிலைகள் எழுச்சியடைந்ததும் வெற்றி பெற்றதும். மறுபக்கத்தில் தேசிய மக்கள் சக்தி வெற்றியடைந்ததுமாகும். இறுதியாக ஒன்றைச் சொல்லி இந்தக் கட்டுரையை முடிக்கலாம். தமிழரசுக் கட்சியின் அரசியல் வெற்றி தற்காலிகமானதே. பதிலாக இன்னொரு சக்தி எழுந்தே தீரும். வரலாறு ஒருபோதும் நேர்கோட்டில் செல்வதில்லை.

## அநுர அரசாங்கத்தில் அதிகாரப் பகிர்வுக்கான

(6ம் பக்கத் தொடர்ச்சி) அல்லது தொடக்கப்புள்ளியாகவோ 13ஆவது திருத்தச் சட்டத்தினை நிராகரித்தமையாகும்.

ஏழாவதாக, உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இணைத்தலைவர்களாக நேர்வே மற்றும் தென்னாபிரிக்கா செயற்பட்ட காலத்தில் சந்திரிகா, ரணில் போன்றவர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தினை விடுத்துச் செயற்படுவதற்கான அனைத்து சாத்தியமான வழிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தமையாகும்.

எட்டாவதாக, வடக்கு, கிழக்கு மாகாண சபைகளைப் பாதுகாப்பதற்கு பதிலாக சீனாவுக்கு எதிரானதொரு அரணாக அதனை காண்பித்துக் கொண்டிருக்கின்றமையாகும்.

ஒன்பதாகவதாக, டில்லியானது தனது பொருளாதார மற்றும் மூலோபயங்களை பாதுகாப்பதற்காக நகர்ந்தபோது 13ஆவது திருத்தச்சட்டத்தினை செயற்படுத்துவதில் தாமதமாக இந்தியாவின் உதவியை நாடும் போக்காகும்.

பத்தாவதாக, சமஷ்டி முறைமையைக் கோரிக்கொண்டு 13ஆவது திருத்தச் சட்டத்தினையும் டில்லியுடனான இணைப்பினை துண்டிக்கும் போக்கானது அதிகாரப்பகிர்வு மறைந்து போவதற்கு காரணமாகின்றது. இவ்விதமான நிலைமையில், தற்போது 13ஆவது திருத்தச்சட்டம் அல்லது மாகாண ரீதியான அதிகாரப்பகிர்வுக்கு வாய்மொழி ரீதியான உறுதிமொழியைக் கூட வழங்காத தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் ஆட்சியில் உள்ளது.

அதுமட்டுமன்றி குறித்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் வடக்கு தமிழர்கள் இல்லை, அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் காணப்படுகின்றது. அரசுக்கு தமிழ்தேசியம் சார்ந்த நாடுகளிடத்தில் நட்பற்ற நிலைமையும் காணப்படுகின்றது. இத்தகைய அரசாங்கமொன்றை கையாள வேண்டிய நிலைமையானது தற்போது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி தமிழ்த் தேசியவாதத்தின் சுயாட்சி, அதியுச்ச அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட வலியுறுத்தல்களுக்கு அரசாங்கத்திடம் உரிய பதில்கள் மட்டுமல்ல அங்கீகாரம் கூட இல்லை. மேலும் 1983ஆம் ஆண்டில் தோற்றம் பெற்ற இந்திய இலங்கை படைகளுக்கு எதிரான தமிழ் இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சியால் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் எதனையும் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஒற்றையாட்சியை நிராகரித்ததன் காரணமாக, 13ஆவது திருத்தச்சட்டத்தினையும் ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமைகள் ஏற்பட்டதோடு சமஷ்டி நோக்கி செல்ல முடியாத நிலைமைகளும் ஏற்பட்டுள்ளதோடு தற்போது ஒற்றையாட்சிக்குள் 13ஐயும் இழந்து விடும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி ஒற்றையாட்சிக்கு வெளியில் அதிகாரப்பகிர்வினைப் பெறுவதற்கான சாத்தியப்பாடுகளும் காணப்படவில்லை.

சிரியாவின் அசாத்தும், சுயாட்சியைப் பெற்றுக் கொண்ட குர்து இனத்தவரும் வொஷிங்டன் அல்லது மொஸ்கோவை விடவும் தமது அபிலாஷைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அண்டைநாடான துருக்கி மிகவும் பொருத்தமானது என்பதையே புரிந்துகொண்டனர்.

வடக்கு தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் ஒத்துழையாமையானது இந்திய, இலங்கை உறவின் நிகழ்ச்சி நிரலில் இருந்து தமிழர்கள், அதிகாரப்பகிர்வு, 13ஆவது திருத்தச்சட்டம் ஆகிய விடயங்கள் நீக்கப்படுவதற்கு காரணமாகின்றது.

தற்போது தமிழ்த் தேசிய அரசியல்வதிகள் வரலாற்று ரீதியாக மிகவும் பலவீனமாக உள்ள நிலையில் 13ஆவது திருத்தச்சட்டத்தை நிராகரிப்பதும், டில்லியின் இணைப்பை துண்டிப்பதும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்கான அதிகாரப் பகிர்வுக்கான வெளிப்புற செல்வாக்கை இழக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

## உலகம் போற்றும் ஆத்மிக அன்னை சிவத்தமிழ் செல்வியின் நூற்றாண்டு விழா!

(20ம் பக்கத் தொடர்ச்சி) அவர் பணி தொடர வாய்ப்பு க்கிட்டியது. அம்மையார் இறைபதம் அடைந்த பின் அம்மையாருக்கு ஒரு உருவச் சிலை தேவஸ்தானத்தில் நிறுவப்பட்டது. அது மட்டுமன்றி அம்மையாரின் அஸ்தியை பேழையில் கொண்டு வந்து ஆலய மேற்கு திசையில் நினைவாலயத்தினை நிறுவி வழிபாடு செய்து வருகின்றோம். ஆண்டு தோறும் அம்மையாரின் பிறந்த நாளில் அறக்கொடை விழாவும் அம்மையார் இறைபதம் அடைந்த நாளில் குரு பூசையும் எமது தேவஸ் தானம் செய்து வருகின்றது. அம்மையாரின் பெயரால் ஆண்டு தோறும் ஏழை மாணவர்களுக்கான கல்வி நிதியம், வைத்தியசாலைகளுக்கான உதவிப்பணம் தொடர்ந்து வழங்கி வருகின்றது.

ஈழத்திருநாடு செய்த புண்ணியத்தால் இத்தகைய ஒரு புனிதப்பிறவி எம் மண்ணில் பிறந்து மாபெரும் சாதனை களைச் செய்து தனது எண்பத்தி மூன்றாவது வயதில் விண்ணகம் நோக்கிச் சென்று விட்டார். இவரைப் போன்ற அரிய மனிதர்களை தேடுவது என்பது இன்று கடினமாகி விட்டது. அர்பணிப்பு மிக்க அறம் காத்த தாயை மறக்க முடியாது. அன்னார் பிறந்து நூறு ஆண்டுகள் நிறைவடையும் வேளை இவரை நீளநினைந்து வழிபாடு செய்வதே எம்கடனாகும். அன்னையே உம்மை இனி எப்பிறப் பில் காண்போம் அம்மா!!!

கலாநிதி ஆறு.திருமுருகன்
தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை
தலைவர் - சிவபூமி அறக்கட்டளை- இலங்கை

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6




OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




Celebrating 32 years of excellence, Eelanadu, a Tamil community newspaper in Canada
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
Kalaimamni, Dr. Nithyasree Mahadevan, presents
Sangeetha Sangamam 2025 - Carnatic Musical Concert
கலைமாமணி டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன் வழங்கும்
சங்கீத சங்கமம் 2025
சிறப்புரை
வேர்களைத் தேடுங்கள்
செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள்
Sunday, March 23, 2025 @ 5:30pm
The Armenian Community Centre
50 Hallcrown Place, Toronto, ON
தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com




Secure. Grow. Protect.
Your Future, Your Terms -
Protect What Matters
KRISHNA
SABARATNAM
Insurance & Investments
I'm here to help! Call now
416-846-2685
Krishna.gsabaratnam@gmail.com
10 Thornmount Drive, Scarborough, ON, M1B 3J4.